1-1-54

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

2

நந்தி:
எக்ஸிபிஷன்

டெலிபோன்:
86294, 86670

காங்கிரஸ் கண்காட்சி

தேனும்பேட்டை, மதராஸ்-6.

23-12-53 லிருந்து 31-1-54 வரை

சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்களால் திறக்கப்பட்டு அமோகமாக நடைபெற்று வருகிறது.

★

கண்கவர் காட்சிகள்:

சென்னை சர்க்கார் மின்சாரப் பகுதி, தபால் தந்தி இலாகா செண்டினரி காட்சி, மற்றும் பல சர்க்கார் இலாகாவினர் கலந்து கொள்கின்றனர்.

பொழுது போக்கு அம்சங்கள்:

தினசரி இலவச நாடக நடன சங்கீத நிகழ்ச்சிகள், பொய்க்கால் குதிரை, பொம்மலாட்டம், 'வெல் ஆப் லைப்', கோலார் தங்க வயல் மாடல், ஜால வித்தை பேசும் பொம்மை, மெழுகுப் பொம்மை, ரங்க ராட்டினம்.

கண் காட்சி நேரம்:

சாதாரண தினங்களில்

பிற்பகல் 2-மணியிலிருந்து இரவு 9-மணி வரை

விடுமுறை நாட்களில்

காலை 11-மணியிலிருந்து இரவு 9-மணி வரை

பிரவேசக் கட்டணம்: அணா 5.

ஸி. எஸ். வேங்கடாச்சாரி.
லெஸ்ஸீ & ஆர்கனைஸர்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 1

1 - 1 - 1954

குழந்தைகளே!	பக்கம் ..	2
அந்தக் காலத்திலே	..	3
மாஸ்டர் பாலகுமார்	..	7
தக்க தண்டனை	..	9
உபகாரம் செய்தால்	..	13
பந்தயம்	..	1
குயிலியின் கதை	..	18
பூரானஸ்	..	2[illegible]
நீல வானத்திலே	..	2
புதிய தொழில்	..	29
அசட்டுப் பிச்சு	..	33
கனவா நினைவா?	..	39

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி

மூன்றும் சேர்ந்த

குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

2)1788

யானைச் செலவு

கந்தசாமி என்பவன் காட்டி லாகாவில் வேலை பார்த்து வந்தான். காட்டிலுள்ள மரங்களோ, பழங்களோ திருட்டுப் போகா வண்ணம் காத்து வந்தான்.

அவன் பெண் காத்தாயிக்குக் கல்யாணம் வந்தது. கல்யாணத்தை வெகு ஜோராக நடத்தினன். கடன் வாங்கிச் செலவழித்தான்.

கல்யாணம் முடிந்தது. கடன் காரர்கள் பிடுங்கல் பொறுக்க முடியவில்லை. நன்றாக யோசித்துப் பார்த்தான். ஒரு யோசனை தோன்றியது. அதன்படி தலைமை ஆபீசுக்கு எழுதியனுப்பினன்.

"காட்டில் மரங்களை இழுக்க ஒரு யானை வேண்டும். 3,000 ரூபாய் ஆகும்" என்று எழுதினன். உடனே ரூபாய் வந்துவிட்டது. யானையும் வாங்கவில்லை, பூனையும் வாங்கவில்லை. இதை அறிந்த கறுப்பன் (கந்தசாமியின் பரமவிரோதி) தலைமை ஆபீசுக்குப் புகார் பண்ணினன்.

கந்தசாமிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை மறுநாள் யானைக்கு ஜுரமாயிருக்கிறது என்று எழுதி 50 ரூபாய் வரவழைத்தான்

சில நாட்கள் ஆனதும், "யானை இறந்துவிட்டது. அதைக் குழி தோண்டிப் புதைக்க நூறு ரூபாய் வேண்டும்" என்று எழுதி அதையும் வாங்கினுள்.

தலைமை ஆபீஸிலிருந்து ஒரு சிப்பந்தியை இதைப்பற்றி விசாரித்துவரும்படி அனுப்பினர்கள். அவர் வந்து, "யானை வாங்கினது உண்மையானல் அதன் தந்தம் எங்கே?" என்று கேட்டார். கந்தசாமி சடக்கென்று, "நான் வாங்கினது பெண்யானை அல்லவா?" என்று கூறினன். சிப்பந்தியும் அசடு வழிய, காரியாலயத்திற்குத் திரும்பினன்.

—R. ராமகிருஷ்ணன்.

குழந்தைகளே!

புது வருஷம் பிறந்துவிட்டது. உங்கள் எல்லாருக்கும் என் உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

இந்த ஆண்டில் நாட்டில் சுபிட்சம் பெருகும் என்று நம்புவோம். குழந்தைகளுக்குப் பல நன்மைகள் உண்டாகும் என்று எதிர் பார்ப்போம்.

இந்த ஆண்டு துவங்கு முன்னமே நாடெங்கும் நல்ல மழை பெய்திருக்கிறது. ஏரி, குளங்கள், நீர்த்தேக்கங்கள் எல்லாம் நிறைந்திருக்கின்றன. தானிய விளைச்சலும் நன்றாக இருக்கிறது. அதனால் நாடு நகரங்களிலும் ஊர்ப் பள்ளிகளிலும் உல்லாசம் பொங்கும் என்று கட்டாயம் எதிர்பார்க்கலாம்.

இந்தப் புது ஆண்டில் கண்ணனில் பல புதிய திட்டங்களைக் கொண்டு வர எண்ணியிருக்கிறோம். ஒவ்வொன்றாக, அடுத்து அடுத்து ஒவ்வொரு புதிய அம்சங்களாகச் சேர்க்கவேண்டும் என்பது எங்கள் விருப்பம். வேடிக்கை விளையாட்டுப் பகுதியும், சித்திரம், புகைப்படம், கதை கட்டுரை முதலிய பகுதிகளையும் புது முறையில் விரிவு படுத்தத் திட்டம் போட்டிருக்கிறோம்.

இந்த ஆண்டில் கண்ணனில் உங்களுக்கே முக்கியமான இடமும் சந்தர்ப்பமும் கொடுக்க முடிவு செய்துள்ளோம். வழக்கமான சில பகுதிகள் தவிர, அநேகமாகக் கண்ணன் முழுவதையும் உங்கள் கதைகளும் கட்டுரைகளுமாகப் போட்டு நிரப்பப் போகிறோம். உங்களுக்குப் பிடித்தமானவற்றை எல்லாம் எழுதலாம். கதை, கட்டுரை, பாட்டு, கேலிச் சித்திரம், ஹாஸ்யத் துணுக்கு, வேடிக்கை-விளையாட்டுப் பாடல்கள், கணக்குகள், இப்படி எது வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஆனால் ஒன்று மட்டும் கவனியுங்கள் பிற பத்திரிகைகளில் வந்தவற்றைப் பெயர்த்து அனுப்பிவிடாதீர்கள். சுமாராக இருந்தாலும் பரவாயில்லை; சொந்தமாக எழுதுங்கள். சொந்தமாக எழுதினால்தான் மனசுக்குத் திருப்தியாக இருக்கும். பிறர் முன்னிலையில் நிமிர்ந்தும் நடக்கலாம்; பெருமையாகவும் இருக்கும்.

"பள்ளிக்கூடப் படிப்புக்கு உதவியாகவும் அவர்களுடைய உல்லாசப் பொழுது போக்குக்குத் துணையாகவும் கண்ணன் அமைந்திருப்பதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். வக்கிரப் புத்தியை வளர்க்கும் விஷயங்கள் கண்ணனில் இல்லாததைக் கண்டு உங்களைப் பாராட்டுகிறேன்" என்று ஒரு பள்ளி ஆசிரியை நமக்கு எழுதியிருக்கிறார்கள். இதைப் படித்தபோது எனக்குப் பெரு மகிழ்ச்சியாக இருந்தது. 'குழந்தைகள் மனத்தை வளர்ச்சிபெறச் செய்ய வேண்டும்; குதர்க்கத்தில் இறங்கச் செய்யக்கூடாது' என்பதே கண்ணனுடைய கொள்கை. இதை நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். மன வளர்ச்சிக்கு வழிதேடுங்கள். கண்ணன் உங்களுக்குப் பல வகையில் உதவியாக இருப்பான்.

அடுத்த இதழ் பொங்கல் இதழ். புதிய தொடர்கதை ஆரம்பமாகிறது. தொடர்ந்து பல புதிய பகுதிகளும் வெளியாகும்.

—ஆசிரியர்.

அந்தக் காலத்திலே...

மேன்மை தங்கிய ஸ்ரீ ஸ்ரீபிரகாசா

சென்னை ராஜ்ய கவர்னர்

இந்தக் காலத்து மாணவன் ஆசிரியரிடம் நடந்து கொள்ளும் முறைக்கும் சுமார் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமைக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. அப்போது நடந்த சம்பவம் ஒன்றை இங்கே சொல்கிறேன். இது உங்களுக்கு எவ்வளவு தூரம் பயன்படும் என்று எனக்குத் தெரியாது. உங்கள் ஆசிரியர்களும் எவ்வளவு தூரம் இதை ரஸிப்பார்கள் என்றும் தெரியாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிக் காலம். அந்தக் காலத்தில் பையன்களும் ஆசிரியர்களும் ஒட்டுறவுடன் பழகினார்கள். பழைய காலத்துக் குரு-சிஷ்ய உறவு அப்படியே இருந்தது. ஆசிரியர் மிகுந்த கண்டிப்புடன் இருப்பார்; ஆனால் அன்புக்குக் குறைவு இருக்காது. பையனுக்கு அவரிடம் உள்ளூற நடுக்கம்தான்; ஆனால்



நிறைய மதிப்பு வைத்திருப்பான். பையனை அடித்தால் அவனுடைய வளர்ச்சி தடைப்படும் என்று நான் நினைக்க வில்லை; ஆனால் பையன் ஆசிரியரிடம் எதையும் மறைத்து ஒளித்து வைப்பதில் அது முடியக்கூடாது. பையனைக் கண்டிக்கும்போதுகூட வாத்தியாரிடம் இந்த அன்புதான் ஓங்கியிருக்க வேண்டும். அப்படித்தான் எனக்குச் சொல்லிக்கொடுக்க வந்த அரிச்சுவடி வாத்தியார் இருந் தார். அவர் வயசான பண்டிதர். அவருக்கு என்னி டம் மாத்திரமல்ல, என் தம்பி, ஒன்றுவிட்ட சகோதரர்கள் எல்லாரிடமும் மிகுந்த அன்பு. நாங்கள் எல்லாருமாகச் சேர்ந்து அவரிடம் எவ்வளவோ கற்றுக்கொண்டோம். வருஷ முடிவில் அவர் எங்களுக்கு விருந்து வைத்தது இன்னும் எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அவ ருடைய மனைவிதான் எங்களுக்குச் சாதம் போட்டாள். வயிறு நிறைய நாங்கள் சாப்பிட்டோம். இவ்வளவெல்லாம் இருந்தும் பண்டிதர் வழக்கத்தை விடமாட்டார்; அவர் இடையிடையே எங்கள் காதை முறுக்குவார்; தலையில் லொட்டென்று குட்டுவார்; தாடையை லேசாகத் தட்டு வார். ஆனால் மாணவர்களுக்கு அவரிடம் எல்லையற்ற அன்பு, மதிப்பு. பழுத்த வயதில் அவர் இறந்தபோது, நாங்கள் கண்ணீர் உகுத்து நின்றோம்.

அந்தக் காலத்தில் விசேஷ பாடம் என்று தனியாக இல்லை; அதற்குத் தகுந்தபடி பயிற்சி பெற்ற ஆசிரியர் களும் இல்லை. அவர் முக்கியமாக எங்களுக்குச் சம்ஸ்கிரு தம்தான் சொல்லிக்கொடுத்தார். ஆனால் ஆங்கிலம், ஹிந்தி, சரித்திரம், கணக்கு எல்லாம்கூடச் சொல்லித் தருவார். அவர் எங்களுக்குப் பிரைவேட் வாத்தியார். தினம் தவறாமல் சாயங்காலம் வந்து பள்ளிக்கூடப் பாடங்களோடு கூடப் பழையகாலத்துத் தேகப் பயிற்சிகளையெல்லாம் நடத்துவார். எங்கள் உடல் நலனில் மிகுந்த அக்கறைகாட்டு வார். நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லிக்கொடுப்பார்.



அப்போது ஏழெட்டு வயதுதான் இருக்கும் எனக்கு. அதனால் சரியாக ஞாபகமில்லை. ஒரு நாள் நான் சரிவரப் பாடங்களைச் செய்யவில்லை; இது மட்டும் ஞாபகமிருக்கிறது. தண்ணீர் குடிக்க வேண்டும் என்று ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி, வெளியே செல்ல அநுமதி பெற்றுக் கொண்டேன். ஆனால் நான் திரும்பவேயில்லை. அதன் பலன், பிறகு அது ஏக அமர்க்களமாகிவிட்டது. நான் எப்போதுமே குறட்டைவிட்டுத் தூங்குகிறவன்; அன்றும் அப்படித்தான். உக்கிராண அறையில் போய்ப் படுத்தேன். படுத்தவன் ஒரேயடியாகத் தூங்கிப்போனேன். ஒரு பெட்டிக்குப் பின்னால் தூங்கிக்கொண்டிருந்த என்னை யாரோ குலுக்கி எழுப்பினார்கள். வாத்தியார் உதைப் பாரோ என்ற பயத்தில் ஒருவர் கண்ணிலும் படாமல்

இருக்க, நான் அந்தப் பெட்டிக்குப் பின்னால் போய் ஒளிந்துகொண்டேன். அப்படியே தூங்கிப்போய் விட்டேன். அது கோடைக்காலம் போல இருக்கிறது; என்னை எழுப்பியபோது உடல் முழுவதும் வேர்த்துக் கொட்டியிருந்தது. என் எதிரே ஆவல் நிறைந்த கூட்டம்!

நான் வரவேண்டிய நேரத்துக்கு வகுப்புக்குத் திரும்பாமற் போகவே பண்டிதருக்கு யோசனையாகிவிட்டது. அலறிப் புடைத்தார். வீட்டிலிருந்த ஆண் பெண் வேலைக்காரர்கள் அத்தனை பேரும் மூலை முடுக்கெல்லாம் என்னைத் தேடத் தொடங்கிவிட்டார்கள். அந்த வீடு இருந்த பெரிய தோட்டத்தில் ஓர் இடம் பாக்கியில்லை. அந்தப் பெரிய வீட்டிலும் ஓர் அறை பாக்கியில்லாமல் தேடிவிட்டார்கள். கடைசியாக நான் ஒளிந்துகொண்ட இடத்தைக் கண்டு பிடித்து விட்டார்கள். யார் அதைக் கண்டு பிடித்தார்களோ, எனக்குத் தெரியாது.

காணாமல் போனவன் எப்படியாவது அகப்பட்டால் போதும் என்கிற ஆவல் தோன்றவே, யார் யாருக்கு எப்படி எப்படியெல்லாம் கோபம் வருமோ, அதெல்லாம் இருந்த இடம் தெரியாமல் புசுபுசுத்துவிட்டது. என்னை வெளியே அழைத்துவந்தபோது ஒரு பயந்தாங்கொள்ளியைப் போலல்லாமல், ஒரு பெரிய வீரனைப்போல் கொண்டு வந்து நிறுத்தினார்கள். எனக்கு ஒரு தொந்தரவும் இல்லாமல் பார்த்துக்கொள்ள என் அம்மா இருந்தாள். அப்போது யாராவது ஏதாவது சொல்லத் துணிந்திருந்தால்கூட, என் அம்மா அடக்கியிருப்பாள். உண்மையில் குழந்தையை ஒருவரும் மைபோட்டு அழைத்துக்கொண்டு போகாமல் இந்த மட்டுமாவது கிடைத்தானே என்று எல்லாரும் மகிழ்ந்ததாகவே தெரிந்தது. எல்லாரும் 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டார்கள். நன்றாக முடிந்த வரையில் சரிதான் என்று எல்லாருக்கும் மகிழ்ச்சி!

பாலகுமார்
கதை: ஆர்வி
சித்திரம்: ஸாமி
காயத்தைத இதனல் துடைத் துக் கொள்.
ஆமாம்! நண்பா! ரொம்ப தாங்க்ஸ்!
அடே! நீ ஸினிமா ஸ்டார் மாஸ்டர் பாலகுமார் தானே?
அதோ எங்கள் வீடு! வா-நாம் போகலாம்!
அதோ என்னுடைய அம்மா!
நான் இப்போது ஊர் திரும்புவது நல்ல தல்ல.
இவன் காயத்துக்கு பச்சிலே மருந்து கொண்டுவா!
சரி
இங்கேயே இரண்டு நாள் இரு! நான் முத்துவை விட்டு பார்த்து வரச்சொல்கிறேன்!
இங்கே பாலகுமார் பத்திரமாய் இருக்கும் போது சென்னையில் இன்ஸ்பெக்டர் சாமுவேலும் டைரெக்டர் ராஜாவும் சந்திக்கிறார்கள்.
இன்று இரவு சர்க்கஸ் குள்ளனைக் கைது செய்யப் போகிறேன்!
அதுதான் சரி
அன்று இரவு..........
அவன் என்ன குற்றம் செய்தான்?
பின்னால் தெரியும்!
இல்லாவிட்டால் நமக்கே ஆபத்து!
இவர்கள் இரண்டு பேரையும் குளோஸ் பண்ணிடனும்.

ஸார்! அந்தப் பயல் பாலகுமார் கம்பிவிட்டான்!
ஹா!!
என்ன?
மறு நாள் காலையில் ......
பேப்பர், காலமணி!
பால குமாரைக் காணோம்!!! சந்தேகத்தின் பேரில் சர்க்கஸ் குள்ளன் கைது!
தாயி! போய் அந்தப் பேப்பரைக் கொண்டு வா!
அம்மா! உங்களைத் தேடிக் கொண்டு யாரோ ஒரு பெரிய மனுஷர் வந்திருக்கிறார்!
வரச்சொல்!
பத்திரிகைச் செய்தியைப் படித்து திடுக்கிட்டேன். ரொம்ப வருத்தமாயிருந்தது. அதைச் சொல்லவே வந்தோம்.
ஆமாம்.
இதோ!
தாயி! இவர்களுக்குக் காபி கொண்டு வா!
தாயீ! தாயீ! ஆபத்து!
அவளையும் பிடி!
கதவைத் திறக்கிறாயா, இல்லையா?
சரி; இவளை மோட்டாருக்குக் கொண்டு போ! அவளை நான் கவனிக்கிறேன்!
தொடரும்.

தக்க தண்டனை

ஜோதிர்லதா கிரிஜா

சிவராமனின் உடம்பு உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் நடுங்கிக்கொண் டிருந்தது. அதற்கு முந்திய வாரம் அவனுடைய அப்பா வாங்கிக் கொடுத்திருந்த புத்தம் புதிய பேனாவைக் காணவில்லை. அவனுடைய கை, கால்கள் கிடுகிடு வென்று நடுங்கின. 'பேனா காணாமற் போய்விட்ட விஷயம் தெரிந்தால் அப்பா என்ன பாடு படுத்தி விடுவார்?' என்று எண்ணிப் பார்த்த போதே சிவராமனுக்கு வயிற்றைக் கலக்கியது.

'எங்கே போய்விடப் போகிறது? எல்லாம் இங்கேதான் எந்த மூலையிலாவது கிடக்கும்' என்ற எண்ணத்துடன் அவனும் வீட்டின் ஒரு மூலை முடுக்கு விடாமல் தேடிப் பார்த்துவிட்டான். அடுப்பங்கரையிலிருந்து வாசல் ரேழி வரை ஓர் இடம் மீதி விடாமல் அலசிப் பார்த்து விட்டான். புத்தம் புதுப் பேனா போன வழி தெரியவேயில்லை!

மெதுவாக அறையின் குறுக்கிலும் நெடுக்கிலும் நடந்துகொண் டிருந்த சிவராமனின் உள்ளத்தில் ஒரு யோசனை பளிச்சிட்டது. சட்டென்று தன்னுடைய தங்கை விமலாவின் அறைக்குள் நுழைந்து எட்டிப் பார்த்தான். அங்கே விமலாவைக் காணவில்லை.

கொல்லைப் பக்கம் சென்று எட்டிப் பார்த்தான் சிவராமன். குளிக்கும் அறையின் கதவு சாத்திக் கிடந்தது. உள்ளேயிருந்து, 'ஸஸரிரி கககமம பபதத நிநிஸஸ' என்ற ஸ்வரங்கள் கிளம்பி வந்து கொண்டிருந்தன. அதிலிருந்து விமலா குளித்துக் கொண்டிருக்கிறாள் என்று ஊகித்துக்கொண்ட சிவராமன் மகிழ்ச்சியால் துடிக்கும்

உள்ளத்துடன் விமலாவின் அறையினுள் நுழைந்தான்.

நடுங்கும் கைகளால் விமலாவின் புத்தக அலமாரியை மெதுவாக ஓசைப் படாமல் திறந்தான். அலமாரியின்மேல் தட்டில், வலது பக்கத்து மூலையில் அவளுடைய பேனா சாத்தினாற்போல் நிறுத்தி வைக்கப்பட் டிருந்தது.

சிவராமன் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான். ஒருவரும் அவனைக் கவனித்ததாய்த் தெரியவில்லை. அவன் சட்டென்று அந்தப் பேனாவை எடுத்துத் தன் கால் சட்டைப் பையினுள் செருகிக் கொண்டுவிட்டான். பிறகு விமலாவின் புத்தக அலமாரியைச் சாத்திவிட்டுப் பரம சாது போல் தன்னறைக்கு வந்தான். சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு பேனாவுக்குப் பெயர் வெட்டும் கடையை நோக்கி நடையைக் கட்டினான்.

இரண்டு பேருக்கும் ஒரே வகையைச் சேர்ந்த பேனாக்களை அவர்களுடைய அப்பா வாங்கிக் கொடுத்திருந்தார். அதனால் விமலாவின் பேனாவைக் கிளப்பி அதில் தன்னுடைய பெயரை வெட்டுவித்துக்கொள்ளச் சௌகரியமாகப் போய்விட்டது சிவராமனுக்கு. தங்கையின் பேனாவில் தன்னுடைய பெயரான 'ஆர். சிவராமன்' என்பதை வெட்டிக்கொண்டு நிம்மதி நிறைந்த உள்ளத்துடன் வீடு திரும்பினான்.

நிற்க; குளித்து முடித்ததும் வெளியே வருவதற்காகக் கதவைத் திறந்தாள் விமலா. கிணற்றடியில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த அவளுடைய அம்மா குளிக்கும் அறையில் உள்ள கரி

தோட்டக்காரன்: ஏண்டா, பயலே! தோட்டத்திலே என்ன பண்ணினே? பூவைப் பறித்தாயா?

பையன்: இல்லை.

தோட்டக்: இலையைக் கிள்ளினியா?

பையன்; ஊஹூம்.

தோட்டக்: பின்னே கிளையை ஒடிச்சியா?

பையன்: அதுவும் இல்லை.

தோட்டக்: பின்னே என்ன செஞ்சே?

பையன்: செடிகளின் வேரையெல்லாம் பிடுங்கிப் பார்த்தேன்!

—மாணிக்கம், மதுரை.

மூட்டையிலிருந்து கொஞ்சம் அடுப்புக்கரி எடுத்துக்கொண்டு சமையலறைக்கு வரும்படி சொல்லிவிட்டு அடுக்களைக்குள் நுழைந்தாள். "ஆமாம்! உனக்கு வேறே வேலையில்லை, எனக்குப் பள்ளிக்கூடத்துக்கு நாழியாச்சு!" என்று முணுமுணுத்த விமலா கரி மூட்டையை நெருங்கினாள். அப்படி அவள் நெருங்கிய போது அவள் காலடியில் ஏதோ வழு

வழுப்பான பொருள் ஒன்று தட்டுப்பட்டது. 'பாம்பு கீம்பாக இருக்குமோ!' என்று பயந்து போனாள் விமலா. காலில் இடறிய பொருள் இன்னதென்று தெரிந்து கொள்வதற்காக அறையின் கதவை அகலத் திறந்தாள்.

கரி மூட்டைக்குப் பக்கத்தில் சிவராமனின் கால் சட்டையும் மேல் சட்டையும் கழற்றி வைக்கப் பட்டிருந்தன. இரண்டுக்கும் இடையில் அவனுடைய பேனா கிடந்தது. குளிப்பதற்கு முன்னால் சட்டை, நிஜார்களைக் கழற்றி இரண்டிற்கும் நடுவில் தன் பேனாவை வைத்த சிவராமன் அதை எடுத்துச் செல்ல மறந்து போயிருந்தான்.

'இந்தத் தடியன் எப்போதுமே இப்படித்தான்! எங்கேயாவது

கைமறதியாகச் சாமான்களைப் போட்டுவிட்டு வீடு முழுவதும் விழுந்து விழுந்து தேடிக்கொண்டிருப்பான்! மக்கு, மடையன்!' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்ட விமலா அண்ணனின் பேனாவை எடுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டு சிவராமனின் அறைக்குச் சென்றாள்.

''சிவராமா! வீட்டுக் கணக்குப் போடவேண்டும். என் பேனாவில் மசி தீர்ந்து விட்டது. உன் பேனாவைக் கொஞ்சம் கொடுக்கிறாயா? எழுதிவிட்டு ஐந்தே நிமிஷத்தில் திருப்பித் தந்து விடுகிறேன்!'' என்றாள்.

''போடி, போ! அதெல்லாம் தர முடியாது. ஒருவர் பேனாவை இன்னொருவர் எழுதினால் நிப் கெட்டுப் போய்விடும்!'' என்று அதட்டினான் சிவராமன். மனத்துக்குள் சிரித்துக் கொண்ட விமலா பேசாமல் தன்னறைக்குத் திரும்பினாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அலமாரியைத் திறந்த விமலா திடுக்கிட்டாள். மேல் தட்டில் செருகி வைத்திருந்த அவளுடைய பேனாவைக் காணவில்லை. அவளுக்குச் சிவராமனின் பித்தலாட்டம் தெள்ளத் தெளிவாகப் புரிந்து விட்டது. 'ஐயோ சிவராமா! நன்றாய் ஏமாந்தாய், போ!' என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டே அண்ணன் அறைக்குச் சென்றாள்.

''அண்ணா! என் பேனாவைப் பார்த்தாயா?'' என்றாள்.

''தெரியுமே உன் சமாசாரம்! எங்கேயாவது தொலைத்து விட்டிருப்பாய்! உன்னுடையதைப் பறிகொடுத்து விட்டு என் பேனாமீது சொந்தம் கொண்டாட வந்து விடப் போகிறாய் என்றுதான் முன் ஜாக்கிரதையாக என் பேனாவுக்குப் பேர் வெட்டிக் கொண்டேன். நல்லவேளை! இல்லாவிட்டால் நான்தான் உன் பேனாவை எடுத்தேன்னு சொல்லியிருப்பே!'' என்றான் சிவராமன்.

'இடிஇடி' என்று சிரித்தாள் விமலா. ''எங்கே, சிவராமா! உன் பேனாவைத் திறந்து எழுதிப் பாரு!'' என்றாள். சிவராமன், சட்டைப் பையிலிருந்து பேனாவை எடுத்துத் திறந்து பார்த்தவன், திடுக்கிட்டான். பேனாவின் முனை ஒடிந்து கிடந்தது.

''முனை ஒடிந்திருக்கிறதோ இல்லையோ? வேண்டும் உனக்கு நன்றாய்! உன்னுடைய பேனாவைத் தொலைத்துவிட்டு என் பேனாவைத் திருடிப் பெயர் செதுக்கிக் கொண்டாயோ, இல்லையோ?.. முழிக்கிற முழியைப் பாரு! அசடு வழிகிறது! என் பேனாவின் முனை நேற்று உடைந்து விட்டது. அப்பா என்ன சொல்வாரோன்னு பயந்துண்டு இருந்தேன். எனக்கு வசவு கிடைக்காமல் காப்பாற்றியதற்காக உனக்கு ரொம்பத் தாங்ஸ்! உன் பேனா வெந்நீர் அறையிலிருந்தது. இனிமேல் அதைப் பிடுங்கலாம்னு கனவுகூடக் காணாதே. அப்புறம் உன் வேலைத்தனத்தைப் பற்றி அப்பாவிடம் சொல்லி விடவேணுக்கும்!'' என்று சொல்லிச் சிரித்தாள் விமலா.

உடைந்த பேனாவையும் விமலாவையும் மாறி மாறிப் பார்த்தபடி அசட்டுவிழி விழித்தான் சிவராமன். 'நான் செய்த தப்புக்குத் தக்க தண்டனை கடவுள் கொடுத்தார்' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.



உபகாரம் செய்தால்...

இச்சாமி சென்டிரல் ஸ்டேஷனுக்கு ஓட்ட ஓட்டமாக ஓடி வந்தான். தலைமயிர் காற்றில் பறந்தது. மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. கால்கள் இற்று விழுந்து விடும்போல் இருந்தது. ஆயினும் அவன் ஒன்றையும் லட்சியம் செய்யவில்லை. அவன் அப்பாவின் பயங்கர அதட்டல் காதில் ரீங்காரம் செய்து கொண்டேயிருந்தது.

“எலே! பம்பாய் மெயிலைத் தவற விட்டே, தோலை உரிச்சுடுவேன்...ஓடு” என்று அவர் போட்ட சத்தத்தில் அங்கே பிடித்த ஓட்டத்தை சென்டிரல் ஸ்டேஷன் வந்துதான் நிறுத்தினான்.

ஆனால், என்ன துரதிர்ஷ்டம்! அவன் பிளாட்பாரத்தில் நுழைவதற்கும், ரெயில் ஊதுவதற்கும் சரியாக இருந்தது. வண்டியும் மெதுவாக நகரத் தொடங்கியது. சிச்சாமிக்கு அடிவயிற்றைக் கலக்கியது. இவ்வளவு தூரம் மூச்சைப் பிடித்துக்கொண்டு வந்துவிட்டு, ரெயிலை விட்டு விட்டால், அப்பா சும்மா விடுவாரா? அவர் என்ன செய்வாரோ என்று நினைத்ததும், அவன் உடம்பில் ஒரு புதிய வேகம் வந்தது. குதிகால் முதுகில் பட ஓடினான், நகர்ந்து கொண்டிருந்த ரெயிலை நோக்கி.

கார்டு கஜானனம், கடைசியாக வரும் தனது வண்டியில் ஏற, நகரும் வண்டிகளைப் பார்த்துக் கொண்டே நின்றார்.

அவர் மிகவும் ஜாக்கிரதையான ஆசாமி. பரோபகார சிந்தையுள்ளவர். திடீரென்று, மான் போல் தன்னைத் தாண்டி ஓடிய கிச்சாமியைப் பார்த்தார். 'பாவம்! ரெயிலைத் தவற விட்டு விட்டு ஓடுகிறானே பையன்' என்று தோன்றியது. உடனே முன்னால் பாய்ந்தார். பையனை அப்படியே அலாக்காகத் தூக்கி, திறந்திருந்த ஒரு வண்டியினுள் தள்ளிக் கதவைச் சாத்தினார். பையன் போட்ட கூச்சல், வண்டி நகர்ந்து கொண்டிருந்ததால் அவர் காதில் சரியாக விழவில்லை. வேறு என்ன சொல்லப் போகிறான், தன் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்வான் என்று நினைத்தார். இதற்குள் தம் வண்டி வரவும் ஏறிக்கொண்டார். இன்று ஒரு நல்ல காரியம் செய்தோம் என்று திருப்தியடைந்தது அவர் மனம்.

சென்னையை விட்டால் அடுத்தாற் போல் நிற்கும் ஸ்டேஷன்

அரக்கோணம்தான். மெயில் வண்டியாகையால் மற்ற ஸ்டேஷன்களில் நிற்காது.

அடுத்த ஒரு மணி நேரத்தில், அரக்கோணம் வந்து நின்றது மெயில். கார்டு கஜானனம் சாவதானமாக வண்டியிலிருந்து இறங்கினார். ஸ்டேஷன் மாஸ்டர் ஆபீஸை நோக்கிச் சென்றுகொண்டிருந்தவர், எதிரே கிச்சாமி ஏதோ சத்தம் போட்டுக்கொண்டே வண்டியிலிருந்து இறங்கி வருவதைப் பார்த்தார்.

“என்ன ,தம்பி! நல்ல வேளையாக ஏற்றி விட்டு விட்டேன். இல்லாவிட்டால் எவ்வளவு கஷ்டப்படுவாய், பாவம்! நீ எங்கு போகவேண்டுமோ? நல்ல சமயத்தில் நான் வந்தேனே!” என்று தட்டிக் கொடுத்தார் கார்டு கஜானனம்.

“நன்னா உதிச்சுது ஸார், யோசனை! எந்த ஊருக்குப் போகவேண்டுமோ? பட்டணத்திற்குத் தான் போகணும். அப்பா கொடுத்த தபாலை ஆர். எம். எஸ். பெட்டியில் போட வந்த என்னை, வண்டிக்குள் தள்ளி இவ்வளவு தூரம் இழுத்துக்கொண்டு வந்துவிட்டீரே! எங்க அப்பா முதுகுத் தோலை உரித்துவிடுவாரே! நான் பட்டணம் எப்படிப் போவேன்?” என்று பெரிதாகக் கத்திக்கொண்டு அழுதான் கிச்சாமி.

அசந்து போய், பேச வாய் எழாமல் விழித்துக்கொண்டு நின்றார், கார்டு கஜானனம்.

பந்தயம்

சம்பந்தம்

தபால்காரன்தான் தட்டுகிருனே என்று அதிக ஆவலாய்க் கதவைத் திறந்த ஜானகி, அங்கே 'கசமுச'வென்று ஐந்தாறு சிறுமிகள் நிற்பதைக் கண்டு ஆச்சரியமுற்ருள். "யார்?" என்று விசாரிப்பதற்குள், அவர்களே ஒவ்வொருவராய் ஆரம்பித்துவிட்டார்கள். "உங்கள் பானு என்னிடம் பந்தயம் கட்டி என் புத்தகத்தைப்

பிடுங்கிக் கொண்டுவிட்டாள்'' என்ருள் ஒருத்தி. ''என் பேனுவை'' என்ருள் மற்ருெருத்தி. ''என் பென்சிலை'' என்ருள் இன்னுெருத்தி. இப்படியாகப் பானுவின் மேல் ஒவ்வொருத்தியும் ஒரு புகார் சொன்னுள். அத்தனையும் என்னவோ, பானு அவர்களிடம் எது எதற்கோ பந்தயம் கட்டி ஜயித்தவை தான். இருந்தாலும் விளையாட்டு வினையாகக் கூடாதல்லவா!

''அப்படியா சேதி! இதோ வந்துவிட்டேன்'' என்று விடுவிடென்று உள்ளே சென்று பானுவின் மரப் பெட்டியைக் கொண்டு வந்து அவர்கள் முன்னிலையிலேயே திறந்து பார்த்தாள் ஜானகி. உண்மையாகவே அவர்கள் சொன்ன பொருள்கள் அனைத்தும் இருந்தன. ''இது உன்னுடையதா? இது உன்னுடையதா?'' என்று கேட்டு அவை அவைகளை எடுத்துக் கொடுத்தாள். அவரவர்கள் பொருள்களை வாங்கிக்கொண்டு சந்தோஷமாய் ஓடினர்கள்.

ஆனல் ஜானகி, திறந்த கதவைக் கூடத் தாளிட மனமில்லாமல், ஆழ்ந்த யோசனையில் அப்படியே உட்கார்ந்துவிட்டாள். 'இந்த ஊருக்கு வந்து குடியேறி இன்னும் மூன்று மாதங்கள் ஆகவில்லையே, அதற்குள் இவள் இப்படி ஆரம்பித்துவிட்டாளே!' என்று ரொம்பவும் வருத்தப்பட்டுக்கொண்டாள். பாவம்! அவள்தான் என்ன செய்வாள்!

பானு அவளுடைய ஒரே செல்லப் பெண். அவள் சிறுமியாயிருந்த பொழுது தன் அம்மாவிடம் எதற்கோ பந்தயம் கட்டி ஒரு ரூபாய் ஜயித்தாள். அன்றிலிருந்து எதற்கெடுத்தாலும், ''என்ன பந்தயம்?'' என்பாள். சோதனையாய், சொல்லி வைத்தாற்போல் அந்தப் பந்தயங்களில் அவளே ஜயித்து வந்தாள்.

இது குறித்துப் பிறரிடமிருந்து வந்த புகார்களைக் கேட்க, பெருந் தொல்லையாய்ப் போயிற்று ஜானகிக்கு. எப்படியும் இதை நிறுத்தியாக வேண்டுமே!

இதற்காக ஒரு நாள் பானு வகுப்பு வாத்தியாரம்மாளையே தனிமையில் சந்தித்தாள் ஜானகி. தன் கஷ்டங்களைச் சொல்லி எப்படியும், பானுவிடம் - அவள் தோற்கும்படியான - சில பந்தயங்களைக் கட்டி அந்தக் கெட்ட பழக்கத்தை அடியோடு ஒழித்துக் கட்டும்படி கேட்டுக் கொண்டாள்.

மறுநாள் பானு அதே வாத்தியாரம்மாளிடம் சென்று, ''அம்மா அம்மா, நீங்கள் தலையில் கறுப்பு நூல் வைத்துக் கொண்டுதானே ஜடையை அத்தனை அகலமாய்ப் பின்னிக்கொண் டிருக்கிறீர்கள்?'' என்ருள். ''இல்லையே, சவுரி வைத்தல்லவா பின்னிக்கொண் டிருக்கிறேன்?''

''இல்லை கறுப்பு நூல்தான். ஒரு ரூபாய்ப் பந்தயம். என்ன சொல்கிறீர்கள்!'' என்ருள் பானு. ''இதோபார். எடு ரூபாயை'' என்று அவசர அவசரமாய்த் தன் ஜடையைப் பிரித்து, சவுரியை வெளியில் எடுத்து எறிந்தாள் வாத்தியாரம்மாள்.

பானு தன் தோல்வியை ஏற்றுக் கொண்டு, ''சாயங்காலம் எங்கள் தெரு வழியாகத்தானே போகிறீர்கள்! அப்படியே வீட்டுப் பக்கம் வந்தால் பணம் தருகிறேன்'' என்ருள்.

அன்று மாலை அந்த வாத்தியாரம்மாள் ஜானகியைக் கண்டு சந்தோஷமாய்ப் பேசினாள். "இதோ இன்றைக்கே உங்கள் பானுவைப் பந்தயத்தில் தோற்கடித்து விட்டேன்!" என்று நடந்ததைச் சொல்லி நகையாடினாள். ஆனால் அதைக் கேட்ட ஜானகி அப்படியே திடுக்கிட்டுப் போனாள். "அடடா, 'இன்று என் வாத்தியாரம்மா ஜடையை பிரிக்கவைக்கிறேன், பார்' என்று என்னிடம் ஐந்து ரூபாய்ப் பந்தயம் கட்டியிருக்கிறாளே, பானு. நீங்கள் என் குழந்தைகளிடம் ஜடையைப் பிரித்துக் காண்பிக்கப் போகிறீர்கள் என்றல்லவா நான் அதற்குச் சம்மதித்தேன்! இப்பொழுது என்னிடம் ஐந்து ரூபாய் வாங்கி, அதில் உங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கத்தான் வீட்டுப் பக்கம் வரச் சொல்லியிருக்கிறாள்!" என்று வருந்தினாள் ஜானகி.

அதே சமயம் இவையனைத்தையும் கேட்டு மறைவில் ஒளிந்திருந்த பானு, "அதெல்லாம் பானுவின் சமர்த்துப் பந்தயம். இனி யாரிடமும் பந்தயம் போடமாட்டேன்" என்று சொல்லிக் கொண்டே திடுமென அங்கே நின்றாள்.

இருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

குயிலியின் கதை

சுகி

"அப்பா, நான் கேட்கிற கேள்விக்கு நீ பதில் சொல்ல முடியுமா?" என்று ராஜம் கேட்டாள்.

"பதில் சொல்லுகிறேன்" என்றார் ராஜத்தின் அப்பா.

"குயில் ஏன் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறது? நீ அதைப் பார்த்திருக்கிறாயா?"

"அதைப் பார்த்தவர்கள் மிகக் கொஞ்சம். அதுக்கு நம்மைப் போன்றவர்களிடம் பயம்."

"ஏன் பயப்பட வேணும்?"

"கேள் ராஜம்! குயில் மறைந்த கதை சொல்லுகிறேன்" என்று கதை சொல்ல ஆரம்பித்தார்.

காலதேவ ராஜா, பொழுது போக்கு என்ற பெண்ணை மணந்தார். அவர் ஒரு குஷிப் பேர்வழி. ராஜாவுக்கு இரட்டைக் குழந்தை பிறந்தபோது மிகவும் சந்தோஷப் பட்டார். இரண்டும் பெண். பகல், இரவு என்று பெயர் சூட்டினார். இரண்டு குழந்தைகளுக்கு அப்பால் குழந்தை பிறக்கவே, ராஜா அறு சுவையின் பெயர்களைச் சூட்டினார். புளிப்பு, கார்ப்பு, கைப்பு, தித்திப்பு, உப்பு, துவர்ப்பு என்று கூப்பிட்டார். ஆறுக்கு அப்பால் போகவே வாரத்தின் பெயர் வந்தது. ராஜ குமாரிகள் எழுவரும், ஞாயிறு, திங்கள்..சனி ஆனார்கள். ராஜா யோசித்தார். ஏழு குழந்தைக்கு அப்பால் போனால் மாதங்களின் பெயரைச் சூட்டுவது என்று தீர்மானம் செய்துகொண்டார். பகல், இரவில் ஆரம்பித்த பெயர்கள், சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி,

கார்த்திகை, மார்கழி என்று ஒன்பது குழந்தைகளுக்குப் பெயர் சூட்டப்பெற்றன.

ராஜா, "ஹே பொழுதுபோக்கு ராணி! நீ இன்னும் மூன்று குழந்தைகள் பெறலாம். தை, மாசி, பங்குனி. அப்புறம் பெண் பிறந்தால் உன் உயிர் போய்விடும்" என்றார்.

ராணிக்கு ஒரே பயம். தை, மாசி, பங்குனிக்கு அப்பால் பெண் பிறந்தால் உயிர் போகுமே என்று கவலைப் பட்டாள். நல்லகாலமாக மார்கழிக்கு அப்பால் பெண் பிறக்கவில்லை! ஆண் குழந்தை பிறந்தது. ராணி புத்திசாலி. ராஜா ஆண் குழந்தைக்குப் பெயர் வைக்குமுன் நட்சத்திரங்களின் பெயர் சூட்டினாள். அசுவதி, பரணி, கார்த்திகை என்று ஒன்பதும் ஆணாகப் பிறந்தன. மார்கழிதான் பெண். குழந்தைகளிலே கடைசிப் பெண் ஆகவே அவள் மீது எல்லாருக்கும் பிரியம். காலதேவ ராஜா, எல்லா ராஜகுமாரிகளுக்கும் சித்திரை, வைகாசி என்ற மாதப் பெயர் எழுதிய தங்கக் கூண்டில் அடைபட்ட ஒன்பது பஞ்சவர்ணக் கிளிகளைப் பரிசாகக் கொடுத்தார். ஒவ்வொரு ராஜகுமாரியும் தங்கள் கிளியின் பேச்சே உயர்ந்தது என்பார்கள். ஜோடி ஜோடியாக, சித்திரையும் வைகாசியும்; ஆனியும், ஆடியும்; ஆவணியும் புரட்டாசியும்; ஐப்பசியும் கார்த்திகையும் சுற்றுவார்கள், விளையாடுவார்கள்.

மார்கழி ராஜகுமாரி மட்டும் தனி. எப்போதும் பஞ்சவர்ணக் கிளியோடு பேசிப் பேசி, அதன் பேச்சைக் கேட்டுக் கேட்டுச் சந்தோஷமடைவாள். எப்படியோ கிளி இறந்துவிட்டது. அதுபோல வேறு கிளி அந்த நாளில் கிடையாது; ஆகவே அவள் அழுதாள். கலங்கினாள். மற்ற ராஜகுமாரிகள் கொடுக்கவில்லை. ராணி பொழுது போக்கு, "அவள் அழுது அழுது பட்டினி கிடந்தால் சரியாகப் போகும்" என்றாள். தாதிகள் பட்டினியாகப் போட்டனர். தன் அறையில் அழுதுப் படுத்திருந்தவள், ஏதோ பாட்டுக் கேட்டாள். அவளை எங்கோ தூக்கிப் போவதாக எண்ணினாள். கறுப்பு நிறச் சிறு குருவி ஒன்று பாடிக் கொண்டிருந்தது.

"ஆகா, என்ன பாட்டு! என்ன குரல், என்ன குரல்!" என்று புகழ்ந்தாள். புகழ்ந்தால் யாருக்குத்தான் உச்சி குளிராது? ஒரு சின்னஞ் சிறு குயிலி மெள்ள மெள்ள அருகில் வந்தது. ஜன்னல் அருகாக மாதுளைச் செடியிலிருந்து பாடிற்று. இறந்த பஞ்சவர்ணக் கிளியை மறந்து கண்ணை இமைக்காது பார்த்தாள்.

"உன் அழகுக் கிளியை மறந்து என்னை வைத்துக்கொள்கிறாயா?"

"ஓ" என்று கூத்தாடினாள்.

"நான் கிளியைப்போல அழகாக இல்லை. ஆனால் ஜோராகப் பாடுவேன்" என்றாள் குயிலி.

குயிலிக் குஞ்சு உற்சாகமாகப் பாடிற்று. மார்கழியின் பசியும் வருத்தமும் பறந்தன. மார்கழி இளவரசி மகிழ்ச்சியில் தூங்கினாள். தாதிகள் ஆகாரம் கொண்டு வந்தார்கள். பால், பழம், கனிவகைகள் வந்தன. "குயிலி, இந்தா!" என்றாள். குயிலி கொத்திவிட்டு ஓடும். குயிலி தின்றதை அவள் தின்பாள். "பறவையின் எச்சில் எனக்குத் தேவாமிர்தம்" என்பாள் மார்கழி. குயிலி பாட

ஆரம்பித்தது. தாதிகள் மகிழ்ந்தார்கள். அரண்மனை எங்கும், "குயிலி, குயிலி" என்ற பேச்சுப் பரவியது.

"குயிலி, உன்னை என் அக்காமார் எட்டுப் பேருக்கும் காட்டுகிறேன், வா" என்றாள். உடனே மார்கழி தன் சுட்டு விரலை நீட்டவே ஜம்மென்று வந்து அமர்ந்தது. சித்திரை ராஜகுமாரி முதல் கார்த்திகை ராஜகுமாரன் வரைக் கண் கொட்டாது பார்த்தார்கள்; காது குளிரக் கேட்டார்கள்.

குயிலி பாடக் கேட்டார் கால தேவ ராஜா. ராணியும் கேட்டாள். ஆனால், அசுவதி முதல் ஆயில்யம் வரை ராஜகுமாரர்கள் குயிலிப் பாட்டைக் கேளாதவர்கள். தங்கைக்காக, நல்ல கிளி தேட முயற்சி செய்வதாகச் சொன்னார்கள்.

"தம்பிமார்களே, எனக்குக் கிளி வேண்டாம். கிளியைவிட அருமையான குரல். தன் பெயர் 'குயிலி' என்று சொன்னது. நீங்களே நேரில் கேட்கலாம். இன்னும் இரண்டு நாழிகையில் வரும்."

அசுவதி, பரணி, கார்த்திகை ராஜகுமாரர்கள் காத்திருந்தார்கள். ஜிவ்வென்று வந்த குயிலி மாதுளை மரத்தில் அமர்ந்தது. சுருதி கூட்டிப் பாடிற்று; பாடிற்று; பிரமாதமாகப் பாடிக்கொண்டேயிருந்தது. கேட்டுக் கிறு கிறுத்துப் போனார்கள்.

ஏதோ ஒரு தின்பண்டம் கொடுக்கவே, குயிலி மூக்கால் கோதி எடுத்தது; பயந்து பறந்து போய்விட்டது.

ராஜகுமாரிகள் எழுந்து போனார்கள். மிருகசீர்ஷம் கேட்டான், "அக்கா மார்கழி, அந்தக் குயிலி நாளை வருமா?" என்று. "வராது வராது" என்று யாவரும் கத்தினார்கள்.

"வரும்" என்றாள் மார்கழி.

"வராது போனாலும் போகலாம். ஆகவே அதை நீ அரண்மனையிலே பிடித்து வைக்க முயற்சி செய்" என்றான் திருவாதிரை. புனர்பூசமும், பூசமும் இதை ஆதரித்தார்கள். நட்சத்திர ராஜகுமாரர்கள் பேச்சைக் கேட்டாள் மார்கழி.

மறுநாள் குயிலி வந்ததும், மார்கழி ராஜகுமாரி அதைப் பிடித்து ஒரு கூண்டில் அடைத்து விட்டாள்.

"ஏன் இங்கே போடுகிறாய்?" என்று கேட்டது குயிலி.

"பூனைகள் நடமாட்டம் உண்டு. நீ பயமில்லாமல் தூங்கலாம்."

"சரி" என்றது குயிலி. பாவம், இரவு முழுவதும் குயிலுக்குத் தூக்கமில்லை. விடிந்தது. குயிலி பாட்டுக் கேட்க கூடிவிட்டனர். மார்கழி, "பாடு" என்றாள்.

"இரவில் தூக்கமில்லை. என்னைத் திறந்துவிடு. இங்கே பாட முடியாது என்றது" குயிலி.

"அதைத் திறக்கக் கூடாது" என்று எல்லாரும் கத்தினார்கள். குயில் பாட மறுத்தது, உண்ண மறுத்தது. மறுநாள் சரியாகி விடுமென எல்லாரும் சொன்னார்கள். மறுநாளும் உண்ண மறுத்தது. பாட முடியவில்லை என அழுதது.

"என்னால் பாட முடியாது. நான் சுயேச்சையாக உலாவ வேண்டும். இல்லையோ இறந்து போவேன்" என்றது குயிலி.

தங்கக் கூண்டில் வைத்து ராஜகுமாரி உலாவக் கொண்டு போனாள். குயிலி மாமரத்தைப்

பார்த்தது. பூங்குளம் கண்டது. பச்சைப் பசிய வயல்களைக் கண்டது. எதைக் கண்டும், அதற்குப் பாட்டு வரவில்லை. கூண்டில் இன்னும் எட்டு நாள் இருந்தால், உலாவக்கொண்டு போனால் சரியாகும் என்றார்கள் அவர்கள்.

எட்டு நாள் போய் விட்டது.

"பாடு" என்றாள் ராஜ குமாரி.

"நான் கூண்டு வழியே பார்த்தால் போதாது. காட்சி முக்கியமல்ல. மாமரத்தில் பறக்க வேண்டும். மாந்தளிர் நடுவே உட்கார வேண்டும். மணமுள்ள பூக்களின் மீது வட்டமிட வேண்டும். நெல் வயல்களைக் கடந்து ஜிவ்வெனப்பாய வேண்டும்."

"அப்படியானால்தான் பாட்டு வருமா? உன் குரல் பேசுமா?"

"ஆமாம்" என்றது குயிலி.

"நீ சந்தோஷமாகப் பாட வேண்டும். பத்திரமாக இருக்க வேண்டும் என்று தங்கக் கூண்டு செய்தேன். நீ பாடினால் போதும். போ.." என்றாள். கதவைத் திறந்தாள்.

குயிலி உற்சாகமாக வெளியே பறந்தது. தளிர் இடையே அமரும். தத்தித் திரியும். பூச்செடிகளை வட்டமிட்டது. நேராக ஓடிப்பறந்தது. எங்கோ போய்விட்டது. மறு நாள் ராஜகுமாரி, "குயிலி வரவில்லையே" என்றாள். நீல வானத்தைப் பார்த்தாள். மாதாந்தர இளவரசிகளும், நட்சத்திர இளவரசர்களும், "அடி பைத்தியம்! குயிலியை விட்டு விட்டாயே" என்று திட்டினார்கள்.

அந்த அரண்மனைத் தோப்பிலே குயிலி பாடினாள். எங்கிருந்து பாடினாள் என்பது யாருக்கும் தெரியவில்லை. ஆனால் அவள் கீதம் மட்டும் எங்கும் ஒலித்துக்கொண்டிருந்தது. எல்லாரும் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

தகப்பனார் சொல்லிய கதையைக் கேட்டாள் ராஜம்.

"இதனால்தான் குயிலியைப் பார்க்க முடியவில்லையா?" என்று ராஜம் திருப்தியடைந்தாள்.

யூரானஸ்

பெ. நா. அ., ஜே. பி. மா.

"நாங்கள் வந்துவிட்டோம், ஸார்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே தள்ளி ஓடி வந்தார்கள் கண்ணனும் ராதாவும்.

"சரி, உங்கள் வரவை எதிர் பார்த்துத் தயாராக இருக்கிறேனே, தெரியவில்லையா?" என்றார் விஞ்ஞானம்.

"இன்றைக்கு எதைப் பற்றிச் சொல்லப்போகிறீர்கள்?" என்றார்கள் ராதாவும் கண்ணனும்.

"அவசரப்படாதீர்கள்! முதலில் உட்காருங்கள். உங்கள் பாட்டி எங்கே?" என்றார் விஞ்ஞானம்.

"இன்றைக்கு மாதாந்தரச் சனிக்கிழமையாம். 'கோயிலில் கூட்டம் அதிகம். நவக்கிரகங்களைச் சுற்றிவிட்டு வருகிறேன். நீங்கள் முன்னால் போங்கள்' என்றாள். நாங்கள் வந்து விட்டோம்' என்றாள் ராதா.

"இன்று சொல்லப்போகும் கிரகம் அங்கே இருக்காது" என்றார் விஞ்ஞானம்.

"கோயிலில் உள்ளவர்கள் இதை அங்கே வைக்க மறந்து விட்டார்கள் என்றா சொல்லுகிறீர்கள்?"

"இல்லை. அவர்களுக்குத் தெரிந்தால்தானே மறப்பதற்கு?" என்று சிரித்தார் விஞ்ஞானம்.

"என்ன, ஸார்! புதிருக்கு மேல் புதிராகப் போட்டுக் கொண்டே போகிறீர்களே! நேரே சொல்லுங்கள்" என்றாள் ராதா.

"பாட்டியும் வந்துவிடட்டும் என்றுதான் இப்படிப் பேசினேன். இதோ அவளும் வந்துவிட்டாள்" என்றார்.

"பாட்டி, கோயிலிலே ஒரு கிரகத்தை வைக்க வில்லையாமே" என்றாள் ராதா.

பாட்டி ஒன்றும் விளங்காமல் விழித்தாள்.

அப்போது விஞ்ஞானம், "நான் குழந்தைகளைப் புரளி பண்ணினேன். அவர்கள் உங்களைப் புரளி செய்யப் பார்க்கிறார்கள்.

"நான் போன தடவை சனியைப் பற்றிச் சொன்னேன், அல்லவா? சனியே சூரியனைச் சுற்றி ஓடும் கிரகங்கள் எல்லாவற்றிலும் அதிகத் தூரத்தில் உள்ளது என்று ஆயிரக் கணக்கான வருஷங்களாக எண்ணி வந்தார்கள்" என்றார்.

"சனிக்கு அப்பாலும் கிரகம் இருக்கிறதா?" என்றாள் ராதா.

"புரொபஸர் சொன்னது உனக்கு மறந்து போய்விட்டாதா? சனிக்கும் அப்பால் சில கிரகங்கள் இருக்கின்றன என்று முன்னாலேயே சொல்லியிருக்கிறாரே!" என்றான் கண்ணன்.

"ஆம், நினைவு வந்துவிட்டது. யூரானஸ், நெப்டியூன், புளூட்டோ."

"அவற்றுள் சனிக்கு அடுத்தாற் போல் உள்ளது யூரானஸ். சனி சூரியனிடமிருந்துள்ள தூரத்தைப் போல் இரு மடங்குத் தூரத்தில் இது சுற்றியோடி வருகிறது.

ஆகையால், இது சாதாரணக் கண்ணுக்குத் தெரிவது கஷ்டம். நல்ல கூர்மையான பார்வை உடையவர்கள் சரியான இடத்தில், நிலவு இல்லாத இரவில், உற்று நோக்கினால், இது மிகச் சிறிய நட்சத்திரத்தைப் போல் தெரியும். ஆகையால்தான் முன் காலத்தில் வாழ்ந்த சிறந்த வானசாஸ்திரிகளும் கூட இதைக் கவனித்துத் தெரிந்து கொள்ள வில்லை.''

''அப்படியானல் இதை யார் கண்டுபிடித்தார்கள்?''

''இங்கிலாந்தில் வாழ்ந்த ஹெர்ஷெல் என்னும் வானசாஸ்திரி சுமார் நூற்றெழுபது வருஷங்களுக்கு முன் இதைக் கண்டு பிடித்தார். அதைப் பற்றிப் பிறகு விரிவாகச் சொல்லுகிறேன்.''

''இதை என் கோயிலில் வைத்துக் கும்பிடுவதில்லை?'' என்றான் கண்ணன்.

''கோயிலில் கும்பிடும் கிரகங்கள் எல்லாம் நமக்கு நினைவுக்கு எட்டாத காலத்துக்கு முன்பே தெரிந்து கொள்ளப்பட்டவை. அவைகளை யார் கண்டுபிடித்தார்கள், எப்பொழுது கண்டு பிடித்தார்கள் என்பது ஒன்றும் நமக்குத் தெரியாது. அந்தப் பழைய காலத்திலே இயற்கைப் பொருள்களையும் சக்திகளையும் தெய்வங்களாக எண்ணி, வணங்கி வந்தார்கள். ஆகையால், கிரகங்களை நமது நாட்டில் மட்டிலுமல்ல; மற்ற நாடுகளிலும், தெய்வங்களாக வழிபட்டு வந்தார்கள்.''

''எல்லாரும் ஒன்று போலவா?'' என்றாள் ராதா.

''இல்லை. உதாரணமாக, நாம் சுக்கிரன் என்னும் கிரகத்தை ஆணாகவும், அசுரர்களுடைய குருவாகவும் குறிப்பிடுகிறோம். இத்தாலி நாட்டிலே சுக்கிரனுக்கு வீனஸ் என்று பெயரிட்டிருந்தார்கள். கிரேக்கர்களைப் போலவே அவர்களும் அதை ஒரு பெண்ணாக மதித்தார்கள். தங்களுடைய குலத்தின் தாயாகக் கொண்டாடினார்கள். நாம் தேவ குரு என்று சொல்லும் வியாழனை அவர்கள் ஜூபிட்டர் என்னும் தேவ தேவனாக வணங்கிவந்தார்கள். வேறு நாட்டுப் புராணங்களில் இவைகளை இன்னும் வேறு விதமாகப் பாராட்டி வந்தார்கள்.''

''சரி, இனிமேல் மூட்டையைக் கட்டிக்கொண்டு, புறப்படலாமா?'' என்றான் கண்ணன்.

''எங்கே, வீட்டுக்கா? இன்னும் ஒன்றுமே சொல்லவில்லையே?'' என்று ஆட்சேபித்தாள் ராதா.

''வீட்டுக்கு இல்லை. யூரானஸுக்கு'' என்றான் கண்ணன்.

''அவசரப்படாதே! முதலில், வழக்கம் போல் நாம் போக வேண்டிய இடத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளுவோம். நமது கண்ணுக்குத் தெரியுமோ தெரியாதோ என்று மிகச் சிறிதாய்த் தோன்றும் யூரானஸ் சனிக்கும் அப்பால் கிட்டத்தட்டத் தொண்ணூறு கோடி மைல் தூரத்தில் இருக்கிறது. சூரியனிலிருந்து அதன் சராசரி தூரம் அதோ எழுதியிருக்கிறேன் பார்'' என்று காட்டினார்.

அதில் 1,783,000,000 என்று எழுதியிருக்கக் கண்ட கண்ணன், ''நீ இதைப் படி ராதா'' என்றான்.

''எனக்குத் தெரியாதோ? நூற்று எழுபத்தெட்டுக் கோடியே முப்பது லக்ஷம் மைல். பூமியைப் போல்

இது எத்தனை மடங்கு தூரம்? சொல்லு பார்ப்போம்'' என்று சிரித்தான்.

"ஓகோ! வகுத்தல் கணக்கா?'' என்று தலையைச் சொரிந்தான் கண்ணன்.

"நான் சொல்லுகிறேன், சுமார் பத்தொன்பது மடங்கு தூரம். இதன் குறுக்களவு பூமியைப் போல் சுமார் நாலு மடங்குக்குச் சற்றே அதிகமாக இருந்த போதிலும், இது வானத்தில் இருப்பதே கண்ணுக்குத் தெரிவது கஷ்டமாக இருப்பதற்குத் தூரம் ஒரு காரணம்.

"மேலும், பூமியைப் போல் யூரானஸ் ஒரு கிரகமாதலால், அதற்குச் சுயமான ஒளி கிடையாது. சூரியனுடைய ஒளி அதன் மீது உறைப்பதாலேயே இது ஒளியோடு தோன்றுகிறது. ஆனல், இது சூரியனிலிருந்து வெகு தூரத்தில் இருப்பதால், நமது பூமியில் விழும் ஒளியில் முந்நூற்றறுபதில் ஒரு பங்கே இதன்மீது விழுகிறது. இது பிரகாசமாகத் தோன்றாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்'' என்றார் விஞ்ஞானம்.

"இதன் குறுக்களவு சுமார் முப்பத்திரண்டாயிரம் மைல். ஆகவே, இது பூமியைப்போல் சுமார் அறுபது மடங்குப் பருமன் உள்ளது. ஆயினும், இது அழுத்தம் அதிகம் இல்லாத கிரகம். இதன் அழுத்தம் நீரின் அழுத்தத்தைப் போல் ஒன்றேகால் பங்கு; பூமியின் அழுத்தத்தில் கால் பங்கு. ஆதலால், இது பூமியைப் போல் சுமார் பதினைந்து மடங்கு கனமே உள்ளது. இவைகள் இரண்டின் அளவையும் ஒரே படத்தில் காட்டியிருப்பதைப் பாருங்கள்.

"பூமியில் உறைப்பதில் 360-இல் ஒரு பங்கு சூரிய வெப்பமே இதன் மீது உறைக்கும். ஆதலால், இது மிக மிகக் குளிர்ந்த கிரகம்.

"இதில் ஒரு நாள் என்பது சுமார் பத்தே முக்கால் மணி நேரம். அதாவது, நமது நாளில் பாதியிலும் குறைவு. இது சூரியனைச் சுற்றி வர சுமார் எண்பத்து நான்கு வருஷங்கள் ஆகின்றன.''

"இது மிகவும் மெதுவாக ஓடுகிறதா?'' என்றாள் ராதா.

"அப்படிச் சொல்ல முடியாது. இதன் வேகம் பூமியின் வேகத்தில் கால் பங்குதான். ஆனாலும், இது நொடிக்கு நாலரை மைல் வீதம் ஓடுகிறது. ஆனல், இது சூரியனைச் சுற்றி ஓடும் பாதை மிகவும் விரிவானது. ஆகையால், ஒலியைக் காட்டிலும் அதிக வேகத்தோடு ஓடிய போதிலும், இந்தக் கிரகம் சூரியனைச் சுற்றி வருவதற்கு எண்பத்து நாலு வருஷங்களுக்குமேல் ஆகின்றன.''

"அதற்குள் பிறந்த குழந்தைக்குச் சதாபிஷேகம் ஆகிவிடும்!'' என்றாள் பாட்டி.

இதை டெலெஸ்கோப்பின் வழியாகப் பார்த்தால், இதன் பிம்பம் சிறிய வட்ட வடிவமாகத் தோன்றும். இதைச் சுற்றி மேகங்கள் இருந்து, இதைச் சற்றே மறைக்கும். மேகங்களின் இடையே தெரியும் இதன் பிம்பமானது சிறிது பச்சை நிறம் உடையதாகவும் மங்கலான பட்டைகள் இட்டது போலவும் தோன்றும். இதற்கு ஐந்து சந்திரன்கள் உண்டு.''

"இனிமேலாவது அங்கே போகலாமா?'' என்றான் கண்ணன்.

"சரி! புறப்படுவோம்!'' என்றார் விஞ்ஞானம்.

நீல வானத்திலே

தங்கமணி

ஒரு நாள், முன்னிரவிலே கதை எழுதவேண்டும் என்று எண்ணினேன்; எண்ணிய விநாடியிலேயே திடீரென்று எனக்கு இறக்கைகள் முளைத்துவிட்டன. கற்பனை இறக்கைகள்தாம்!

இறக்கை முளைத்துவிட்ட பிறகு சும்மா, பூமியிலேயே ஊர்ந்துகொண்டு கிடக்க யாருக்குத்தான் மனம் வரும்?..குபீரென்று வானவெளியை நோக்கிப் பறந்தேன்!

வெகு நேரமாயிற்று..

பகல் மறைந்தது; இருள் வந்தது; நிலா பிறந்தது; பொடி நட்சத்திரங்கள் உதித்தன.

"ஐயோ..பாவம்!" என்று ஒரு குரலைக் கேட்டதும் நான் திடுக்கிட்டேன்; அண்ணாந்து, என் தலைக்கு மேலே கவனித்தேன்.

"ஆம், ஆம். நான்தான்.. அதோ! அங்கே பாருங்கள்.." அகண்ட பூமியின் எங்கோ ஒரு மூலையைச் சுட்டிக் காட்டிக் கூறியது துருவ நட்சத்திரம். உடனே அது சுட்டிய இடத்தைப் பரபரப்புடன் நான் பார்த்தேன்.

அந்த இடம்—ஒரு சிறு பாறைக்குன்று; பனி மழையில் நனைந்து, குளிர் நிலவில் பளபளக்கும் மலைக் குட்டி; அதன் அடிவாரத்தில், ஓரிடத்தில், ஒரு சிறுவன் தன்னந்தனியாய்க் குந்திக் கிடந்தான்!

"என்ன நேர்ந்துவிட்டது?.." என்று துடிப்புடன் கேட்டேன்.

"ஆமாம், அநுதாபப்படும்படியான கதைதான்!" என்று கூறிவிட்டு, நட்சத்திரம் அவன் கதையை ஆரம்பித்தது.

* * *

அந்த மலைக் குன்றுக்கு வடமேற்குத் திசையில், சுமார் நான்கு மைல் தூரத்தில் ஒரு சிறு கிராமம். அந்தக் கிராமத்தின் பெயர் காந்தியூர். இளம் வயதிலேயே தாயை இழந்த அவனும் - அவன் பெயர் அரிச்சந்திரன் - அவன் தந்தையும் அந்தக் கிராமத்திலேதான் வசித்து வருகிறார்கள்.

ஒரு நாள் அந்தி நேரத்திலே, அரிச்சந்திரனின் அப்பா, வேலைக்குப் போய் விட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது, "ஐயா..." என்று கூப்பிட்டுக் கொண்டே புத்தகப் பையும் கையுமாக அவரிடம் வந்தான், ஒரு பள்ளிச் சிறுவன். அவன் அரிச்சந்திரனோடு படிப்பவன். அவனைக் கண்டதும் அரிச்சந்திரனின் அப்பா, "என்ன தம்பி, என்ன சேதி? எங்கே அரிச்சந்திரன்..?" என்று அன்புடன் கேட்டார்.

"...ம்...வந்து.... உங்கள் மகன் அரிச்சந்திரன், இன்று மதியத்திற்கு மேல் பள்ளிக்கே வரவில்லை, ஐயா. ஒழுக்கங்கெட்ட சில செல்வச் சிறுவர்களுடன் சேர்ந்துகொண்டு, எங்கோ ஊர் சுற்றப் போய்விட்டான். நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாய்

விட்டது! அவன், இந்த ஓரிரு மாதங்களாய்....'' என்று. இன்னும் என்னவெல்லாமோ சொன்ஞன் அவன்.

அரிச்சந்திரனின் அப்பாவுக்கு அவன் சொன்னதைக் கேட்டதும், கத்திக் காயத்தில் மிளகாய்ப் பொடி பட்டது போலாயிற்று! அவர், ''உம், ஹூம்! அப்படியா சமாசாரம்! சோம்பேறிக் கழுதை, வீடு வரட்டும்...!'' என்று கொதிக்கும் எண்ணெயில் விழுந்த தண்ணீர் மாதிரிப் படபடத்து விட்டு, வீட்டிற்கு வந்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் வந்து சேர்ந்தான் அரிச்சந்திரன்!

''அடேய்! எங்கேடா போய் விட்டு வருகிருய்?'' என்று மீசையை முறுக்கி விட்டுக் கொண்டே, அரிச்சந்திரனை நோக்கிக் கேட்டார் அப்பா.

''எங்கே போய் வருகிறேனு? என்ன அப்பா, பள்ளிக்கூடத்திற்குத்தான் சென்று வருகிறேன்'' என்று உள்ளொன்று ஒளித்துக் கொண்டு புறமொன்ருய் வெளியிட்டான் அந்தப் பையன்!

''ஏன் இவ்வளவு நேரம்?''— கோபக்குதிரையின் கடிவாளத்தை

இழுத்துப் பிடித்துக்கொண்டே கேட்டார் அப்பா.

''...பள்ளிக்கூடம் விட்டதும், தமிழ் வாத்தியாருடன் பேசிக் கொண்டே அவர் வீடுவரைக்கும்-'' ஒரு பொய்யை ஒளித்து மழுப்ப ஒன்பது பொய்களைப் புனைந்து கூறும் அவன் சிண்டைப் பிடித்து உலுக்கிக் குலுக்கி, அறைந்து தள்ளினுர் அப்பா!

''ஒழுக்கங் கெட்ட ஊதாரி நாயே! பள்ளிக்கூடம் போகாமல், ஊர் சுற்றி விட்டு வந்து, உள்ள மறியப் பொய் கூறும் மானங் கெட்ட மடையா! பன்றிக்கு மல்லிகைப் பூ என்று பெயர் வைத்தேனே!..கழுதை! இனி பொய் சொல்லுவாயா? பொய் சொல்லுவாயா?..''என்று இன்னும்மேலே ஏசிப் பேசிக்கொண்டே அடித்தார் அப்பா. பள்ளிக்கூடம் செல்லாமல் ஊர் சுற்றி வந்த சேதி, எப்படியோ அப்பாவுக்குத் தெரிந்து விட்டதைக் கண்டு மனம் அதிர்ந்த அரிச்சந்திரன், ''அப்பா! அப்பா! அடிக்காதீர்கள், அப்பா! இனி மேல் பள்ளிக்கூடத்திற்குத் தவருமல் போகிறேனப்பா! இனிமேல், சத்தியமாக—ஆணையாக, எந்தச் சந்தர்ப்பத்திலும் பொய் சொல்லவே மாட்டேன் அப்ப்..பா!'' என்று, மெய்யான உள்ளத்துடன் கதறினுன் அரிச்சந்திரன்.

''உம்! மீண்டும் சொல்லு! 'இனி, சத்தியமாகப் பொய் சொல்ல மாட்டேன்!' என்று மீண்டும் மீண்டும் கூறு!'' என்று மறுபடியும் கையை ஓங்கினுர் அப்பா.

அந்த நேரத்திலே—

''சதானந்தம் பிள்ளை!..சதானந்தம் பிள்ளேய்!..''என்று தெரு

வாசலிலிருந்து ஒரு குரல் வந்தது.

அந்தக் குரலைக் கேட்டதும், அப்பா கோபத்தைத் துறந்து, குலை நடுங்கினர்!

ஏனெனில்—வாசலிலிருந்து அதிகாரச் செருக்குடன் கூக்குரலிடும் அந்த ஆசாமி, அடுத்த தெரு வட்டிக் கடை வஜ்ஜிராயுதம் பிள்ளை. சுமார், ஒன்றரை வருடங்களுக்கு முன்னே அரிச்சந்திரனின் அப்பா சதானந்தம் பிள்ளை, வஜ்ஜிராயுதம் பிள்ளையிடம் ரூபாய்க்கு ஓரணு வட்டி வீதம், ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கிவிட்டு, இவ்வளவு காலமாகியும் கடனைத் தராமல் - தர முடியாமல்—என்னென்னவோ சாக்குப் போக்கெலலாம் சொல்லிச் சொல்லி மழுப்பிக்கொண்டு வந்தார்; ஆனல், இன்று—?

என்ன செய்வது? எப்படித் தப்பித்துக்கொள்வது?

"அடேய்! உம், சீக்கிரம்! உள்ளே வந்து விடப் போகிருர்! உடனே ஓடிப் போய் அவரிடம், 'என் அப்பா வீட்டிலில்லை: எங்கோ வெளியே போயிருக்கிருர்! நாளைக்குத்தான் வருவார்' என்று சொல்! உம்! ஓடு!" என்று அரிச்சந்திரனின் காதோடு காதாய்ச் சொன்னர், அவன் அப்பா. அவர் இட்ட கட்டளையைக் கேட்டு—அரிச்சந்திரன் திகைத்தான்! விழித்தான்!

"அப்பா! இனி பொய்யே சொல்ல மாட்டேன் என்று அழுத்தத் திருத்தமாக ஆணையிட்டு அரை விநாடிகூட ஆகவில்லையே! இதற்குள்...." என்று நெஞ்சை

நிமிர்த்திக்கொண்டு சொன்னன் அரிச்சந்திரன்.

"அட பாவி! சமய சந்தர்ப்பமறியாத சண்டாளா! போடா!" என்று அரிச்சந்திரனின் கழுத்தைப் பிடித்துத் தள்ளினர் அப்பா.

உள்ளே வந்துகொண்டிருந்த வஜ்ஜிராயுதம் பிள்ளையின் மீது போய் 'டணர்' என்று மோதிக்கொண்டு விழுந்தான் அரிச்சந்திரன்!

அப்புறம்......

வஜ்ஜிராயுதம் பிள்ளை, சதானந்தம் பிள்ளையின் திருட்டு விழிப்பைக் கண்டதும் மகா ஆக்ரோஷமாய்க் கூக்குரலிட ஆரம்பித்தார்.

போர்க்களத்தில் சிக்கிக்கொண்ட அபிமன்யுவைப் போல அரிச்சந்திரன் தத்தளித்தான்.

பிறகு, "என்ன ஓய், விழிக்கிறீர்! வாங்கிய கடனைத் திருப்பித் தர வக்கில்லை என்ருல் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாவதுதானே! இடது கைக்குத் தெரியாமல் வாங்கினீரே! கொடுக்கும் போதும் அந்த நாணயம் இருக்க வேண்டாமா? ஓய்!.. உமக்கு மானம், ஈனம், ரோஷம், வெட்கம் இருந்தால் - மரியாதையாக இன்னும் ஒரு வாரத் தவணைக்குள் என் பணத்தைக் கொடும்! இல்லையோ...ஆமாம்... அப்புறம்

என்ன நடக்குமோ!-அதை இந்த ஊர் முச்சந்திதான் உணரும்!'' என்று கூறிவிட்டு விர்ரென்று வெளியேறினர் வஜ்ஜிராயுதம் பிள்ளை.

மறு விநாடி, ''எல்லாம் இந்த நாசகாரப் பாவி மகனல் வந்தது தான்! என் மானத்தைச் செல்ல ரிக்கப் பிறந்த செல்லுப் பூச்சி! இன்னுமா என் எதிரில் நிற்கிருய்? உம், ஓடிப்போ இந்த வீட்டை விட்டு!'' என்று அரிச்சந்திரனைக் கண் காது தெரியாமல் நையப் புடைத்து வீட்டை விட்டுத் துரத்திவிட்டார் சதானந்தம் பிள்ளை!

சத்தியத்தைக் காக்க நினைத்த அரிச்சந்திரன் வீட்டை விட்டுக் கிளம்பினன்; அலைந்தான்; அல்ல லுற்ருன்; கடைசியில் - நாணயங் கெட்ட இந்த உலகத்தில் சத்திய சந்தனய் வாழ முடியாமல் நேரே இந்த மலைக் குன்றுக்கு வந்து.. இன்னும் சிறிது நேரத்தில் குன் றின் மேலிருந்து வீழ்ந்து இறக்கக் கிடக்கிருன்!''

அந்தக் குன்றின் அடிவாரத் தில் குந்திக் கொண்டிருந்த அந்தச் சிறுவனின் சோகக் கதையைச் சொல்லி முடித்தது, துருவ நட்சத்திரம்.

''ஹூம், பாவம்! அவனும் உன்னைப்போலப் பெருமையடைய வேண்டியவன்...'' என்று கூறிக் கொண்டே மெல்லக் குனிந்து, குன்றின் அடிவாரத்தைப் பார்த் தேன்.

அங்கே, அந்தச் சிறுவனைக் காணேம்!

பள்ளத்தில் விழுந்து விட் டானே, தெரியவில்லை! சத்தியத் தைக் காப்பாற்ற எண்ணிய அவன் என் உள்ளத்தில் பதிந்து விட்டான்.

வாத்தியார் மனைவி: உங்க பள் ளிக் கூடத்திலே கொஞ்சம் களி மண் இருந்தா அனுப்புங்கோ; இரண்டு குமுட்டி அடுப்புப் போட ணும்.

வாத்தியார்: நாலைஞ்சு பையன் களை அனுப்பறேன். போதுமா?

—S. பாலசுப்பிரமணியன், கோயில் பட்டி.

புதிய தொழில்

கே. எஸ். பி

தூக்க முடியாத சுமையைத் தூக்கிக்கொண்டு வந்து வாசற் குறட்டில் வைத்துவிட்டு நீண்ட பெருமூச்சு விட்டான் வடிவேலு! அவன் கிராமத்தில் சலவைத் தொழில் செய்பவன். சுருக்கங்கள் படிந்திருந்த அந்த முகத்திலே ஒரு புத்தொளி வீசியது.

"ரங்கம், துணியையெல்லாம் எடுத்து மடி! பையன் வந்தானு!" என்றான்.

"காலையிலே எங்கேயோ போறேன்னு போனவன்தான்; சாப்பாட்டுக்குக்கூட வரல்லே; வரவர வீட்டிலேயே தங்கற தில்லே உங்க அருமைப்புள்ளே!" என்று சொல்லிவிட்டு, மூட்டைப் பாரத்தை உள்ளே எடுத்துச் சென்றாள் ரங்கம்.

'எல்லாம் இவனைப் படிக்க வைக்கிற பலன் இது! சலவைத் தொழில் செய்ய இவனுக்கு என்ன இளப்பம்?' என்று முணுமுணுத்து விட்டுக் கயிற்றுக் கட்டிலில் சாய்ந்தான் கிழவன்.

மணி ஐந்து இருக்கும். தெருவில் 'காச் மூச்' என்று சத்தம் போட்டுக்கொண்டே சிறுவர்கள் விளையாட ஆரம்பித்தனர்.

ரங்கம்மாளுக்குத் துயரம் நெஞ்சைப் பிளந்துகொண்டு வந்தது.

'இந்தப் பாவி மவனைப் பெத்து நான் என்ன சுகத்தைக் கண்டேன்!' என்றுதான் அவள் மனம் வேதனைப்பட்டது.

கிழவன் மாத்திரம் ஆரம்ப முதலே எச்சரித்துக் கொண்டிருந்தான்: "பயலைப் போற வழியிலேயே விட்டுட்டா ஆபத்துத்தான்! ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?"

"ஆமாம்! குடும்பத்துக்கே ஒரு புள்ளையாச்சு; இவனைப் படிக்க வச்சா என்ன தலை முழுகிப் போச்சு; எழுத்து படிக்கக் கூடத் தெரியாம இருந்தா என்ன பலன்? உங்க காலம் எப்படியோ ஆயிடுச்சு; இனிமே படிக்காதவன் எப்படி வாழறது!" என்றாள் தாய்.

வடிவேலு மகனைப் பள்ளிக்கூடம் அனுப்பத் தொடங்கினான். எட்டாவது முடிந்ததும், "படிப்பை இனிமே நிறுத்திப்புடலாம்னு இருக்கேன்! கிராமத்துப் படிப்பு போதாதா?" என்றான்.

"நல்லாயிருக்கு! பட்டணத்தில் போய்ப் படிக்கட்டும்; வூட்டுக்கு ஒரே புள்ளையாச்சு; இந்தப்போதுக்கு உங்களுக்கு வரும்படிக்கும் குறைவில்லே! மாசாந்தரச் செலவுக்கு ஐம்பது ரூபாய் அனுப்பி வையுங்களேன்!"

"என்னிக்கும் பிள்ளைக்குப் பரிஞ்சுண்டு வா நீ. படிச்சு இவன் என்ன உத்தியோகம் பாக்கப் போறான், சொல்லு! இப்பவே

தொழில்லே செலச்சால்தானே நாளைக்கு நல்லது!"

ரங்கம்மாள் அடம் பிடித்தாள். மறுநாளே சுப்பிரமணியன் பட்டணம் போனான்.

வடிவேலுக்குப் பெரிய கவலையாய்ப் போய்விட்டது. அவனுக்கோ வயது அறுபதாகி விட்டது. உழைத்து உழைத்து வளம் பெற்றிருந்த அந்த உடல் ஓய்வை நாடியது.

காலையில் துணி மூட்டையைக் கழுதைமேல் ஏற்றிக்கொண்டு ஆற்றுக்குச் செல்லும்போதெல்லாம் சுப்பிரமணியனின் நினைவுதான் அவனுக்கு:

'வூட்டோட இருந்தா எனக்கு எவ்வளவு உதவியாயிருக்கும்? தனியாப் பட்டணத்தில் படிச்சு இவன் என்ன குப்பை கொட்டப் போறானோ?'

பகல் பன்னிரண்டு மணிக்கு வீடு திரும்பினால், அவன் உடல் நன்றாகக் களைத்துப் போயிருக்கும்.

'இன்னும் எத்தினி நாளைக்கு நான் உழைக்கணுமோ?'

ரங்கம்மாள் கண்ணில் பொறி பறக்க, "நல்லாயிருக்கு, இன்னும் ஒரே வருசந்தான்! இந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் ஆனா, வேலைக்குப் பூடமாட்டானா சுப்பிரமணியன்; அப்புறம் இந்த வேலையையே நீங்க வுட்டுடலாம்; அது மட்டும் பல்லைக் கடிச்சுக்கிட்டு இருங்க!" என்றாள்.

பல்லைக்கடித்துக்கொண்டுதான் இருந்தான் வடிவேலு. ரங்கம்மாள் சொன்ன ஓராண்டுக் கெடுவும் நகர்ந்துவிட்டது.

சென்னையிலிருந்து கடிதம் வந்தது:

"பரீட்சை எழுதியிருக்கிறேன். எனக்கு என்னமோ பயமாத்தான் இருக்கு! ரொம்பக் கஷ்டமான பரீட்சை! ரிசல்ட்டு வந்ததும் வேலை தேடலாம்னு இருக்கேன்!"

"ரிசல்ட்டு வர மட்டும் அங்கே என்ன வேலை, இந்தத் தடியனுக்கு! இங்கே வரக்கூடாதோ?" என்றான் வடிவேலு.

"இங்கே என்ன வச்சிருக்கு; மூட்டை மூட்டையா அழுக்குத் துணியும் கழுதையும்தான் இங்கே இருக்கு! அங்கேதான் இருக்கட்டுமே!" என்றாள் ரங்கம்.

"ம்ம்! உன் இஷ்டம்! எல்லாம் நீ செல்லம் கொடுத்துக் கொடுத்துத் தான் அவன் இவ்வளவு தூரத்

துக்கு வந்திருக்கான்! அவன் உருப்பட்டால் பாரேன்!''

"நீங்க தாறுமாறாப் பேச வேண்டாம்; நாளைக்கே நூறு நூறாச் சம்பாதிக்கப் போறான்; நீங்க பல்லை இளிக்கப் போறீங்க பாருங்க!''

* * *

ரிசல்ட்டு வெளிவந்தது. பரீட்சை பாஸானது கண்டு, சொர்க்கமே கிடைத்துவிட்டாற் போலத் துள்ளிக் குதித்தான் சுப்பிரமணியன்.

"பாஸ் ஆயிடுச்சு; நாளைக்கே வேலைக்குப் போகலாம்னு இருக்கேன்; அப்புறம் நீ, நாயினா எல்லாருமா இங்கே வந்துடலாம்''

என்று தாய்க்குக் கடிதம் எழுதினான் சுப்பிரமணியன்.

வேலை தேடப் போனபோது தான் அவனுக்குச் சிரமம் தெரிந்தது. கூலி வேலை கிடைப்பது கூட அரிதாக இருந்தது.

"பாருங்க; சும்மா அலட்டிக்கிட்டீங்களே! இனிமேத்தானே எல்லாம் இருக்கு. கொஞ்சம் கஷ்டப்பட்டாலும் இனிமே சொகம்மா வாழலாமே!'' என்று வாயைப் பிளந்தாள் ரங்கம்.

"என்னமோ பார்க்கலாம்'' என்று உறுமினான் கிழவன்.

* * *

ஒரு மாதம் கழிந்தது. அன்று வடிவேலுவுக்குச் சுப்பிரமணியனிடமிருந்து மணியார்டரும் லெட்டரும் வந்திருந்தன.

"நாயினாவுக்கு நமஸ்காரம். இத்துடன் ஐம்பது ரூபாய் அனுப்பியிருக்கேன். நீங்க இங்கே ஒரு தரம் வந்து போங்க!''

ரங்கம்மாள் எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்து விட்டதுபோலக் குதித்தாள்.

"நீங்க செலவழிச்ச பணத்துக்கு வட்டியும் முதலுமா திரும்பி வர்றது பாருங்க! வேலை கெடச்சுடுத்து போல இருக்கு, அதிர்ஷ்டந்தான்!'' என்றாள்.

* * *

மூன்று நாட்கள் கழித்து மகனைப் பார்த்துவர ரங்கமும் வடிவேலுவும் பட்டணத்துக்குக் கிளம்பினார்கள்.

'என்ன இருந்தாலும் படிச்சவன் ஒசத்தித்தான்!' என்ற எண்ணம் வேரூன்றிப் படர்ந்தது கிழவனின் மனத்தில்.

வெகுநாள் கழித்துப் பிள்ளையைப் பார்க்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில், புடவைத் தலைப்புக் கூடக் கீழே சரிந்து விழுந்தது ரங்கம்மாளுக்கு! இருவரும் வேகமாக நடந்தனர்.

* * *

நாற்பதாம் நம்பர், தாமஸ் கார்டன் தெரு!

கிழவன் கால்கள் பூமியில் பாவவே யில்லை. ரங்கம்மாள் திடுக்கிட்டாள்.

“கிருஷ்ணா பின்மென்— துணிகள் சலவை செய்யப்படும்— முதலாளி: சுப்பிரமணியம்'' என்ற எழுத்துக்கள் அடங்கிய பலகையைப் படித்ததும், கிழவனுக்கு மூச்சே நின்றுவிட்டது.

“வாப்பா; இதுதான் என் கடை; மயிலாப்பூரிலேயே என் கடைதான் நல்லா நடக்குது; எந்தத் தொழிலானா என்ன? பணம்தானே முக்கியம்! படிச்சா மாத்திரம் வேலை கெடச்சுடறதா சொலபத்திலே?'' என்று வரவேற்றான் சுப்பிரமணியன்.

கிழவன் வடிவேலுவின் கண்கள் உள்ளுக்குச் சென்றுவிட்டன. ரத்தம் உறைவதைப் போன்ற உணர்ச்சி அவன் உடல் முழுவதும் பரவியது.

“அட பாவி; இந்தத் தொழில் செய்வதற்குத் தானா உன்னை இம்மாம் பணம் கொட்டிப் படிக்க வச்சேன்?'' என்று இரு கைகளையும் அகல விரித்தான் கிழவன்!

பிச்சைக்காரன்: ஐயா, ஓரணாப் பிச்சை போடுங்க!

பெரியவர்: என்னடா ஓரணா கணக்கு? காலணாப் போதாதா?

பிச்சைக்: அதெல்லாம் ஆள் தராதரம் இல்லீங்களா? -மதுரம்.

மோட்டார் படகு 'சர்' ரென்று தண்ணீரைக் கிழித்துக்கொண்டு சென்றது. அப்போது மண்ணும் மலையும் நிறைந்த பூமியில் இருப்பதாகவே அசட்டுப் பிச்சுவுக்குத் தோன்றவில்லை. அன்னப் படகு ஒன்றில் ஏறிக்கொண்டு ஏதோ ஒரு புதிய உலகத்துக்கே போவது போல் எண்ணினான். சுற்றிலும் எங்கே பார்த்தாலும் ஒரே நீலம். துறைமுகம் வட்டமாகவும் பார்க்க அழகாகவும் இருந்தது. சற்றுத் தூரத்திலிருந்த கப்பல் ஜலத்திலே கட்டிய வேடிக்கையான மாளிகை போல இருந்தது. முதல் முதலாகக் கப்பலை இன்று பார்க்கப் போகிறோம் என்ற ஆவல் அவனுக்கு உண்டாயிற்று. புஸ்தகத்தில் படித்த கப்பலுக்கும் நேரில் பார்க்கும் கப்பலுக்கும் அடேயப்பா, எவ்வளவு வித்தியாசம்!

கப்பலிலிருந்து பெரிய பெரிய பெட்டிகளும் மூட்டைகளும் இறங்கிக்கொண்டிருந்தன. கரையில் இருந்த ஒரு 'கிரேன்' அவற்றைச் செந்தூக்காகத் தூக்கி அநாயாசமாகக் கீழே இறக்கின. கப்பலின் மேல் தளத்திலும் கரையில் 'கிரேனு'க்கருகிலும் சில ஆட்கள் நின்று வேலை செய்துகொண்டிருந்தார்கள். கப்பலுக்கு அருகில் படகு வந்த பிறகுதான் கப்பல் எவ்வளவு உயரத்தில் இருக்கிறது என்பது தெரிந்தது. எப்படிப் படகிலிருந்து கப்பலில் ஏறுவது என்று அசட்டுப் பிச்சு அங்காந்து பார்த்தான். ஆனால் இன்ஸ்பெக்டர் மேலே யிருந்த உத்தியோகஸ்தரைப் பார்த்து ஏதோ சைகை காட்டவே, அடுத்த கணம் ஏணி போன்ற ஒரு படிக்கட்டு, தொப்பென்று கீழே விடப்பட்டது. அதற்கு நேராகப் படகு வந்து நின்றது.

"ம்ம், நீ முதலில் ஏறு!" என்றார் இன்ஸ்பெக்டர். பிச்சு முதலில் ஏறினான். பின்னால் இன்ஸ்பெக்டரும் ஏறினார். கப்பலின் மேல் தளத்துக்குப் போனதும் பிச்சு சுற்றிலும் ஒரு முறை பார்த்தான். ஆகா, என்ன அற்புதமான காட்சி! பரீட்சை தேறியதும் கப்பலிலேயே உத்தியோகத்துக்கு வந்துவிட வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. கப்பல் உத்தியோகஸ்தர்களின் உடைகள் பார்க்க அவ்வளவு கவர்ச்சிகரமாக இருந்தன. இன்ஸ்பெக்டர் குரூப் அவனை அங்கிருந்த உத்தியோகஸ்

தருக்கு அறிமுகம் செய்து வைத்தார். பிறகு மூவரும் சுற்றிச் சுற்றி வந்த ஒரு படிக்கட்டின் வழியாகக் கப்பலின் கீழே இறங்கினார்கள். கப்பலின் பாய்லரும் புகைபோக்கியும் கணகணவென்று ஒரு கதகதப்பைக் கொடுத்தன. ஒரு பெரிய தெருவே கப்பலினுள் அடங்கியிருப்பதுபோல இருந்தது. பிறகு மற்றொரு புறமாக மேலே வந்து மிகவும் அழகாக இருந்த ஓர் அறைக்குள் நுழைந்தார்கள். அந்த அறையில் எல்லாவித வசதிகளும் நிரம்பியிருந்தன. ஸ்பிரிங் மெத்தை வைத்த ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. உட்கார்ந்தபடியே சாய்ந்துகொள்ளவும படுத்துக்கொள்ளவும், படுத்துக்கொண்ட படியே கப்பலிலிருந்து கடலைப் பார்க்கவும், கப்பலின் கொடியைப் பார்க்கவும் வசதியாக அமைக்கப்பட்டிருந்தன. அவர் தான் கப்பலின் காப்டன் என்பதைப் பிச்சு விரைவில் புரிந்து கொண்டான். அந்த அறைக்குள்ளேயே டெலிபோன் சாதனங்களும் திசை பார்க்கும் கருவியும் உலகப் படமும் கடல்மார்க்கங்களும் கச்சிதமாக வைக்கப்பட்டிருந்தன.

சற்றைக்கெல்லாம் ஒரு தட்டில் பிஸ்கட்டுகளும் சுடச்சுட மூன்று



கோப்பைத் தேநீரும் வந்தன. 'சாப்பிடு' என்று சொல்லும் வரையில் பிச்சு காத்திருக்க வில்லை. அப்படிக் காத்திருக்க வேண்டும் என்பதுதான் மரியாதை என்றும் அவனுக்குத் தெரியாது. அவர்கள் அதை ஒன்றும் பொருட் படுத்தவில்லை. திடீரென்று சங்கு ஊதியது. பிச்சு எட்டிப் பார்த் தான். கப்பலில் இருந்தவர்கள் அங்குமிங்குமாகப் போய் வந்து கொண்டிருந்தார்கள்.

"இனி, என்ன நடந்தது என் பதைச் சொல்லுங்கள்" என்றார் இன்ஸ்பெக்டர் குரூப். காப்டன் பிச்சுவைப் பார்த்துச் சிறிது யோசனை செய்தார். உடனே இன்ஸ்பெக்டர், "ஒன்றும் யோசனை செய்யவேண்டாம். இவன்தான் இந்தக் கேஸைக் கண்டுபிடிக்க உதவியாக இருந் தான். மேற்கொண்டும் உதவியாக இருப்பான்" என்றார். பிச்சு வுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல இருந் தது. "கேஸாவது, உதவியாவது!" என்று அவன் குருட்டு யோசனை செய்துகொண்டிருந்தான். மத்தி யான்னம் பிடிபட்ட ஆட்களுக்கும் இப்பொழுது கப்பலுக்கு வந்திருப் பதற்கும் ஏதோ தொடர்பு இருக் கிறது என்று அவனுக்குப் பட்டது.



அது உண்மையாயிற்று. அது 'கலே' என்ற பிரெஞ்சுக் கப்பல். இப்போது அது ரங்கூனிலிருந்து இங்கே வந்து ஒரு வாரம் ஆகி றது. கப்பலில் வந்த பிரயாணி களைச் சுங்க அதிகாரிகள் சோதனை போடுவது வழக்கம். அநுமதி இல்லாமல் வெளிநாட்டுப் பொருள்களைப் பிரயாணிகள் கொண்டுவரக் கூடாது. பலர் விலை மதிப்பான பொருள்களைத் திருட்டுத்தனமாகக் கொண்டு வருவதாகச் சுங்க அதிகாரிகளுக் குப் புகார் கிடைத்திருந்தது. அத னால் உள்நாட்டு வியாபாரம் சீர் குலையும் போலிருந்தது. இதைத் தடுக்கச் சுங்க அதிகாரிகள் ஜரூ ராக இருந்தார்கள். இந்தப் பிரெஞ்சுக் கப்பலில் இரண்டு பிரயாணிகள் சோதனையிலிருந்து எப்படியாவது தப்ப ஏற்பாடு செய் தார்கள். அவர்கள் தப்பிச் செல் லப் 'பிளான்' போட்டார்கள்.

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பார்கள்.

நல்லகாலம் இருந்தால் ஒரு சமயம் தப்பிக்கலாம். திருடனுக்குப் பொல்லாத காலமும் வந்துவிட்டால் அவன் எப்படித் தப்புவான்? அவர்கள் கப்பலை விட்டு இறங்கியதும் இரண்டு கூலிகளைப் பிடித்தார்கள். ஒவ்வொருவன் கையிலும் பத்து ரூபாய் நோட்டுகள் இரண்டை வைத்தார்கள். நோட்டைக் கண்டதுமே அந்தக் கூலிகள் இருவரும் முதலில் மலைத்துப் போனார்கள்.

"சாமீ! நாங்க பொழைக்கற பொழைப்பு போயிடுமே!" என்றார்கள்.

"பயப்படாதீங்கடா! இந்தப் பெட்டியை எப்படியாவது ஒருவருக்கும் தெரியாமல் வெளியிலே கொண்டு வந்துவிட வேண்டியது உங்க பொறுப்பு. பெட்டியைக் கொண்டுவந்து கொடுத்ததுமே கையிலே ரொக்கமாய் ஆளுக்கு நூறு ரூபாய் வாங்கிக்க வேண்டியது. இன்னும் இரண்டு பேர் வேண்டியிருந்தால் அவங்களுக்கும் ஐம்பது ஐம்பது கொடுத்து விடுகிறோம்" என்றார்கள்.

அந்தக் கூலிகள் இருவரும் விழித்தார்கள். ஒருவன் நீண்ட நாளாகக் கூலியாளாக இருப்பவன்; மற்றவன் புதிது. அவன் உடனே தைரியமாக, "என்ன அப்பா முளிக்கிறே, பேசாமே ஒப்புக்க. என் மச்சான் படகு வச்சிருக்கான், பாத்துக்கலாம்" என்று மற்றவனுக்குக் காதோடு தைரியம் சொன்னான்.

"என்ன ரகசியம் பேசறீங்க?" என்றான் பிரயாணி.

"இல்லே..பணம்தான் பத்தாது. ரொம்பக் கஷ்டமான வேலைங்க.. இன்னும் நூறு ரூபாய் போட்டுக் கொடுத்தா, ஏதோ பார்க்கலாம். அதான் சொன்னேன்" என்றான் புதிய கூலி.

கூலிகள் இருவரும் கேட்ட தொகையைக் கொடுக்க அவன் சம்மதித்தான். வேறு வழியில்லாமல் பழைய கூலியும் அதில் அகப்பட்டுக் கொண்டான். பெட்டிகளை எல்லாம் 'டாக்'கில் கொண்டு போய்க் கலந்து வைத்தார்கள்.

சுங்க அதிகாரிகளின் சோதனை நடந்துகொண்டிருந்தது. ரங்கூன் பிரயாணிகள் இருவரும் தங்களுடைய அடையாளச் சீட்டு, அரசாங்க அநுமதி, கப்பல் டிக்கெட் எல்லாவற்றையும் காட்டிவிட்டுத்தான் வெளியே வர வேண்டும். சோதனை முடிந்து பிரயாணிகள் வெளிவர ஒரு நாள் இரண்டு நாள் ஆவது வழக்கம்.

ரங்கூன் பிரயாணிகளின் சோதனை வந்தபோது ஒருவன் அடையாள அநுமதிச் சீட்டுகளைக் காட்டிச் சோதனையிலிருந்து வெளியேறினான். ஆனால் கூலிகளை அமர்த்தினானே அவனுடைய அநுமதிச் சீட்டு வைத்திருந்த உறையை எடுக்கப் பைக்குள் கையை விட்டான். தேள் கொட்டியது மாதிரி இருந்தது. அந்தப் பெரிய காகிதக் கவரைக் காணோம்!

அதைத்தான் பொல்லாத காலம் என்பது! அந்தச் சீட்டுகள் மட்டும் அவனிடம் இருந்திருந்தால் அவன் திருட்டு வெளிப்படாமலே இருந்திருக்கும். ஆண்டவனைப் பார்த்துத் திருடனுக்குத் தகுந்த தண்டனை கொடுத்துவிட்டார். அவன்



உள்ளேயே காவலில் தங்கியிருக்கும்படி ஆகிவிட்டது.

ஆனால் மறு நாள் கப்பல் மாலுமி ஒருவர் மேல் தளத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது அங்கே ஒரு பெரிய கவர் இருப்பதைக் கண்டார். பிரித்துப் பார்த்தால் அவனுடைய பிரயாண அநுமதிச் சீட்டு முதலியவை அதில் அடங்கியிருந்தன. அது கிடைத்ததும் காவலிலிருந்தவனை வெளியே விடலாம் என்று அவனைப் பார்த்தால், ஆளைக் காணவில்லை. ஏதோ மாட்டிக்கொண்டு விட்டோம் என்று எண்ணி அவன் எப்படியோ வெளியே தப்பிச் சென்றுவிட்டான்.

இதற்குப் பிறகு அந்தக் கூலிகளில் ஒருவன் நூறு ரூபாய் நோட்டை மாற்றிக்கொண்டிருந்தபோது இன்னொரு கூலி பார்த்திருந்து வந்து சுங்க அதிகாரிகளிடம் சொல்லிவிட்டான். "ஏதோ பணம் தெரியவில்லை. ரொம்ப அட்டகாசமாய் இருக்கிறான்" என்று சொன்னதும் அவனைப் பிடித்துப் போலீஸில் ஒப்படைத்து நெருக்கின போதுதான் பெட்டி சமாசாரம் வெளிவந்தது.

பெட்டியை அவர்கள் குறிப்பிட்ட இடத்துக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டார்கள். பிரயாணிகள் பெட்டியை வாங்கிக் கொண்டு மறைந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அவர்களைக் கண்டு பிடிக்க அவனுடைய பிரயாணச் சீட்டுகளை இன்ஸ்பெக்டர் (துப்பறியும் பகுதி) குரூப்பிடம் கொடுத்து அவர்களைத் தேடச் சொல்லியிருந்தார்கள்.

இந்த விவரங்களை அசட்டுப் பிச்சு தெரிந்துகொண்டான். உடனே அவனுக்குச் சில விஷயங்கள் ஞாபகத்துக்கு வந்தன. அந்தக் கேஸைக் கண்டு பிடிக்கத்தான் குரூப் அவனைத் தந்தியடித்து வரவழைத்திருக்கிறார். மாடியில் திருட வந்தவன்தான் அநுமதிச் சீட்டைத் தொலைத்த பிரயாணி. எப்படியோ உளவு வைத்து அங்கிருந்து திருட வந்திருக்கிறான். மற்றொருவன் ரெயிலில் கண்ட போலீஸ்காரன். அவன்தான் பிச்சுவின் காலில் வந்து விழுந்தவன். அவன் எங்கே இவனோடு சேர்ந்தான்! அப்படியானால் செல்லமுத்து என்ற அந்தப் பழைய கொள்ளைக்காரனுக்கும் இதில் சம்பந்தம் ஏதாவது இருக்குமோ?

பிச்சுவும் இன்ஸ்பெக்டரும் அந்தக் கப்பல் காப்டனிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே

போலீஸ் அதிகாரி: என்னப்பா. உம் மகன் அடிக்கடி திருடிவிட்டு போலீஸ் வந்து நிற்கிறானே! நீ அவனுக்குச் சரியான வழி சொல்லக்கூடாதா?

கை. தகப்பன்: நான் சரியான வழிதாங்க சொல்லிக் கொடுத்தேன். அந்த மடப்பயல்தான் அசட்டுத் தனமாய் மாட்டிக் கொள்கிறான்.

—எஸ். வி. சக்திவேல், தென்புத்தூர்.

வந்தார்கள். காப்டன் பிச்சுவின் கைகளைப் பிடித்துக் குலுக்கி, "நீ தான் அந்தப் பிரயாணியைப் பிடித்தாய்! நீ இல்லாவிட்டால் அந்தக் கேஸே ஒன்றுமில்லாமல் போயிருக்கும். அந்தப் பெட்டியையும் மற்றத் திருடர்களையும் நீயே கண்டு பிடித்து விடுவாய் என்றும் நம்புகிறேன். கடவுள் கிருபையினால் உனக்கு நல்ல எதிர்காலம் ஏற்படும்" என்றார்.

'காக்காய் உட்காரப் பனம் பழம் விழுந்தது' என்ற கதையாக நடந்தவற்றை எண்ணிக்கொண்டு பிச்சு இன்ஸ்பெக்டருடன் மெல்ல வெளியே நடந்தான்.

"எங்கே போகவேண்டும் இனி மேல்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"பீச்சு பீச்சு என்று வெளியூரில் இருப்பவர்கள் எல்லாம் ஒரேயடியாகக் கொண்டாடுகிறார்கள். எனக்குப் பீச்சுக்குப் போய்ச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தால் தேவலை போலிருக்கிறது!" என்றான் பிச்சு.

'ஹைகோர்ட் பீச்சுக்குப் போவோமோ, மரீனா பீச்சுக்குப் போவோமா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"கிட்டே எந்தப் பீச்சு இருக்கிறது?"

"ஹைகோர்ட் பீச்சுதான்!"

"சரி; அங்கேயே போகலாம்" என்றான் பிச்சு.

துறைமுகத்திலிருந்து பார்த்த போது ஹைகோர்ட் பீச்சு நன்றாகத் தெரிந்தது.

"அதுதான் ஹைகோர்ட் பீச்சு!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இப்படியே நடந்து போகலாம் போலிருக்கிறதே. நான் நடந்து வருகிறேன். நீங்கள் மோட்டார் சைக்கிளில் சுற்றிக்கொண்டு வாருங்கள். அங்கே நாம் சந்திக்கலாம்' என்றான் பிச்சு.

இன்ஸ்பெக்டர் சிரித்துக் கொண்டே அவன் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, "சரி, அப்படியே செய்" என்று சொல்லிச் சென்றார்.

(தொடரும்)

கனவா? நினைவா?
"டேய் சுப்பு, தீபாவளிப் பக்ஷணங்களை அப்படி ஒரே மூச்சிலே தின்காதே. அஜீரணம் வரும், சொப்பனம் வரும்" என்றாள்
அம்மா. சுப்புவுக்கோ இரண்டும் ரொம்பப் பிடிக்கும். பக்ஷணமும் பிடிக்கும், சொப்பனமும் பிடிக்கும். பக்ஷணத்தை அளவுக்குமீறித் தின்றான். போய்ப் படுத்துத் தூங்க ஆரம்பித்தான்
ஒரு குரங்கு அவன் மேல் ஏறிக் குதித்தது. அதுதான் போச்சு என்றால் ஒரு நாய் அவன்

மீது ஏறி ஒரு பெரிய பந்தை மூக்கில் வைத்து வித்தை காட்டிற்று. அப்புறம் ஒரு பெரிய யானை ஜன்னல் வழியாக அவன் கால்களைப் பிடித்து இழுத்தது. அவனுடைய கோட்டை எடுத்து ஒரு கரடிக் குட்டி போட்டுக் கொண்டு குதித்தது. ஒரு பெரிய சிங்கம் அவன் பக்கத்தில் படுக்க வந்து விட்டது. சுப்பு அலறியபடி எழுந்திருப்பதற்கும் பொழுது விடிவதற்கும் சரியாக இருந்தது.

அப்பொழுது ஒரு சர்க்கஸ் பபூன், பையா! நாங்கள் இந்த ஊரில் சர்க்கஸ் போட வந்திருக்கிறோம். நேற்றிரவு உங்கள் வீட்டுத் தோட்டத்தில் தங்கினோம். நேற்றிரவு மிருகங்களினால் தொந்தரவு இல்லாமல் இருந்ததா?" என்றான். சுப்பு பிரமித்துப் போனான்: நான் இப்பொழுது தூங்கிக் கொண்டிருக்கிறேனா, அல்லது விழித்துக் கொண்டிருக்கிறேனா?"

—மணி.



சந்தாதாராகச் சேர்ந்துவிட்டீர்களா?

வருஷ சந்தா (தீபாவளி மலர் சேர்த்து) ரூ. 4/-

Reg. No. M. 5542

பொங்கல் பரிசு!

உங்கள் சிநேகிதர், தம்பி தங்கைகளின் பிறந்த நாள், விசேஷ நாள் பரிசாக நீங்கள் வழங்கக்கூடிய ஒப்பற்ற பரிசு!

★

கண்ணன் வெளியீடுகள்

1. சின்ன ராஜா
2. பவழவல்லி
3. ஜக்கு
4. விளையும் பயிர்
5. விஞ்ஞானம் பேசுகிறுர்
6. சமர்த்து மைனு
7. ராஜாவும் குருவியும்
8. கழுகும் கிளியும்
9. தவளையும் காளையும்
10. தங்கத்தின் பந்து
11. கோழி விதைத்த நெல்
12. என் பேர் என்ன?
13. குளிகைத் தீவு

இந்த 13 புத்தகங்கள் அடங்கியவை அழகிய பரிசுப் பாக்கெட்டுகள்; ஸெலபோன் காகிதம் சுற்றியது.

பரிசுப் பாக்கெட்டுகள்

விலை ரூ. 4/-

★

தனித் தனியாக வாங்கினுல் மொத்தம் ரூ. 5-13-0 ஆகிறது.

சென்ற வருஷம் ரூ. 2-8/- ஸெட் வாங்கியவர்கள் 1-8/- அனுப்பி மீதியைப் பெற்றுக்கொள்ளலாம்

தபால் செலவு தனி

ஜனவரி முடியத்தான் இந்தப் பரிசுப் பாக்கெட்டுகள் விற்பனை ஆகும்.

காங்கிரஸ் கண்காட்சியில் மின்சார இலாகாவுக்கு எதிரிலுள்ள கலைமகள் ஸ்டாலைப் பாருங்கள்.

மானேஜர் :: கண்ணன் :: சென்னை - 4

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN